பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 16 ஞாயிற்றுக்கிழமை 02.04.2023 கதிர் 143

## ரயில், சுகாதாரம், கல்வி, தபால், வங்கிகள் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதிப்பு

நாடாவியரீதியில்ரயில், சுகாதாரம், கல்வி தபால், வங்கி ஆகிய துறைகளைச் சார்ந்த தொழிற்சங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது கவனயீர்ப்பு போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த தரப்பினர், அரசாங்கத்தின் புதிய அறிவிப்பின் பிரகாரம் ஆறு முதல்36சதவீதம்வரையில் தமது சம்பளத்தில் வரியாக அறவிடப்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதனால், நாடாளவிய ரீதியில் ரயில், சுகாதாரம் மற்றும்தபாற்துறைசேவைகள் முற்றாக பதிக்கப்பட்டன.

குறிப்பாக, வைத்திய சாலைகளில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்தமாற்று சிகிச்சைகள் ஆகியனவே செயற்பாட்டில் இருந்தது. எனினும்,ஏனைய பகுதிகள்செயற்படாமையால் பொதுமக்கள் சிரமத்துக்கு உள்ளாகியதாக தெரிவித்தனர்.

# சட்டவிரோத கடற்றொழிலை எதிர்த்து ஏப். 3 போராட்டம்

### மீனவர்கள் அறிவிப்பு

-எஸ்.நிதர்ஷன்-

சட்டவிரோதகடற்தொழிலுக்கு எதிராக ஏப்ரல் 3 ஆம் திகதி பருத்தித்துறையில் பெரும் போராட்டம் முன்னெடுக்க உள்ளதாக மீனவ சங்க பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை பிரதேச செயலகம் வரையாக முன்னெடுக்கப்படவுள்ள எதிர்ப்பு போராட்ட பேரணிக்கு அனைவரும் ஆதரவை வழங்க வேண்டு மென்று கோரிக்கை விடுத் துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள கடற்தொழில் அமைப்புகள் இணைந்து யாழ். பாசையூரில் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பின் போதே யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் முன்னாள் தலைவர் அ.அன்னராசா மற்றும் வடமராட்சி சங்க சமாச முன்னாள் தலைவர் வர்ணகுலசிங்கம் ஆகியோர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன் ☞2

## இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்கனவே இரண்டு, மூன்று அல்லது நான்கு அணிகளாகப் பிரிந்து - பிளவு பட்டு - கிடக்கின்றது என்பது உண்மைதான். அது கடந்த ஒன்பது வருடங்களாகக்கட்சித்தலைமையைவிடாது, கெட்டியாகப் பிடித்து வைத்திருக்கும் மாவை சேனாதிராசாவின் சாதனை மகாத்மியம். அது வேறு விடயம்.

ஆனால் அந்தப் பிளவு - பிரிவு - நேற்று முன்தினம் தந்தை செல்வா ஜயந்தி தின நினைவேந்தலிலும் எதிரொலித்தது என்ற செய்தி, இட்டுக்கட்டப்பட்ட கதை. ஊடக (அ)தர்மப் பிரச்சாரம். தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு புரியாதவர்களின் பேச்சு. அவ்வளவுதான்.

இந்தியாவில் ராம ஜயந்தி, காந்தி ஜயந்தி எனப் பெரியார்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் வழமை உள்ளது. ஆனால் தமிழரசுக் கட்சி தனது மறைந்த தலைவர்களின் நினைவு ☞2

## தேர்தலை உடன் நடத்தும்படி அமெ. செனட் குழு வலியுறுத்து

தேர்தல்களை மேலும் காலம் தாழ்த்தாது நடத்துமாறு அமெரிக்க செனட்டின் வெளியுறவுக்குழு கோரியுள்ளது.

இதுதொடர்பில் அமெரிக்க செனட்டின் வெளியுறவுக்குழு விடுத்துள்ள டுவிட்டர் பதிவில்,

'இலங்கை மக்களின் குரலை நசுக்கும் எந்தவொருசெயற்பாடும்ஜனநாயகவிரோதமான செயற்பாடாகும். இதனூடாக இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக் குத் திகதி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவி னால் அறிவிக்கப்பட்டபோதும் அதனை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## சீன நாட்டவர் 28 பேர் கைது

பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்து இலங்கைக்குத் தப்பிச் வந்த 28 சீனப் பிரஜைகள் சுற்றுலா விடுதி ஒன்றில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களில் 5 சீனப்பெண்களும்அடங்குகின்றனர்என்றுஅளுத்கமபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து மடிக்கணினிகள் மற்றும் பெறுமதியான கைத்தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சீனாவில் இணையத்தில் சுமார் இரண்டு மாதங்களாக இந்தப் பண மோசடி மேற்கொள்ளப்பட்டது என்றும், சர்வதேச பொலிஸார் வழங்கிய அறிவித்தலுக்கு அமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனத் தூதரகத்தில் இருந்துமொழிபெயர்ப்பாளர் ஒருவரை வரவழைத்து சந்தேகநபர்களிடம் ☞2

### அடக்குமுறையை எதிர்த்து

# வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களிலும் ஒரே நாளில் அரச எதிர்ப்பு போராட்டம்

### தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புகள் முடிவு

-எஸ்.நிதர்ஷன்-

வட கிழக்கில் மேற் கொள்ளப்பட்டு வருகிற ஆக்கிரமிப்புக்கள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக வடகிழக்கின் 8 மாவட்டங்களிலும் அரசிற்கு எதிராகப் போராட்டங்களை நடத்துவதற்குப் பல அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் தீர்மானம் எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

தமிழர்களின் அடையாளங்களை அழித்து பௌத்த மயமாக்குகின்ற செயற்பாடுகள் தொடர்பில் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் ஒன்றுகூடி ஆராயும் கலந்துரையாடலொன்று தந்தை செல்வா கலையரங்கில் சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூட்டத்தின் முடிவில் பல கட்சித் தலைவர்களும் இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ஈபிஆர்எல்எப் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் கலாசாரம் பண்பாடு விழுமியங்கள் என்பது நீண்ட காலமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் ஆட்சிக்கு மாறி மாறி வருகின்ற ஆட்சிகள் இதனைத் தொடர்ந்து செய்து வருகின்றன.

இந்த ஆக்கிரமிப்புக்கள் அடக்குமுறைகள் தொடர்பாக ஜனாதிபதி ஆளும் தரப்பினர் எனப் பல தரப்பினடமும் பல்வேறு மனுக்களை கொடுத்தும் பேசியும் இருக்கின்றோம்.



எனினும் இதுவரை காலமும் அந்த நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை.

இவ்வாறு அன்று முதல் இன்று வரை தமிழ் மக்களின் வரலாற்று அடையாளங்கள் அழிக்கப்பட்டு பௌத்த மயமாக்கின்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக வடக்கு - கிழக்கிலுள்ள கன்னியா, வெடுக்குநாறி மலை குருந்தூர்மலை ஆலயங்கள் உட்பட பல ஆலயங்களை இலக்கு வைத்து தொல்பொருள் என்ற போர்வையில் தற்போது பௌத்த மாயமாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. ☞2

## தேர்தலை நிறுத்துவதாக தீர்மானம் எடுக்கவில்லை

### தபால் மூல வாக்களிப்புப் பற்றி ஆணையாளர் புதிய அறிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்குத் தேவையான நிதி ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன் விடுவிக்கப்பட்டால், ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூல வாக்களிப்பு நடத்தப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்பு நடைபெறுவதற்கு ஏப்ரல்10ஆம்திகதிக்குள்தபால்வாக்குச்சீட்டுகளை அரச அச்சகத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நிறுத்துவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் புஞ்சிஹேவா அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 10 ஆம் திகதிக்குப் பின்னர் நிலைமையைக் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் ☞2

## வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட மூவரும் விடுதலை

### அமைச்சர்கள் தலைமையில் இன்று முக்கிய முடிவு என்கிறார் திலீபன் எம்.பி

வவுனியா,நெடுங்கேணி - வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தில் விக்கிரங்களை மீளபிரதிஷ்டைசெய்வதற்கான வேலைகளில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட மூவரும் நேற்றிரவுவிடுவிக்கப்பட்டனர் என்றும், அமைச்சர்களின் பங்குபற்றுதலுடன் இது தொடர்பில் தீர்க்கமான முடிவு இன்று எடுக்கப்படும் என்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்தார்.

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்வது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெடுக்குநாறி மலையில் ஆதி லிங்க ஆலய விக்கிரகத்தையும்உடைக்கப்பட்ட ஏனையவிக்கிரகங்களையும் இன்றுஞாயிற்றுக்கிழமைமீள பிரதிஷ்டை செய்வதற்கான நடவடிக்கைகளை ஆலய நிர்வாகத்தினர் முன்னெடுத்திருந்தனர். அதனடிப்படையில் அதற்கான ☞2

# நான் பதவியில் இருக்கும் வரையும் சட்டம், ஒழுங்கை மீற விடமாட்டேன்

### ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டம்



தான் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் சட்டம், ஒழுங்கை மீற எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேபோல் தான் ஒரு போதும்பிரச்சித்தமானதீர்மானங்களை மேற்கொள்ளப் போவதில்லை எனவும், மாறாக சரியான தீர்மானங்களையே எடுப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, பிரசித்தமான தீர்மானங்களினால் நாட்டுக்கு சீரழிவு மட்டுமே ஏற்பட்டதாகவும்தெரிவித்தார.

முப்படைகளினதும் தலைவரான ஜனாதிபதி, அநுராதபுரத்திலுள்ள விமானப்படை முகாமில் நேற்றுமுப்படையினருக்கான சிறப்புரை ஆற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கருத்துச் சுதந்திரத் திற்கமைய தன்னை விமர்சிக்க அனைவருக்கும் சுதந்திரம் உள்ளதென சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, வீதிகளில் வன்முறைகளைமேற்கொள்ள எவருக்கும் உரிமை இல்லை எனவும் வலியுறுத்தினார்.

சரியானதை செய்ய அனைவரும் பழகிக்கொள்ள வேண்டும் என்றும், அதற்கான சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குஉள்ளதாக என்பதை அறியவே, சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளை முதலில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும் அவர் தெரி வித்தார்.

அதனைஉதாரணமாகக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைக்க ☞2

## பன்மடங்கு மோசமானது

### புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் யாழில் அம்பிகா கருத்து

தற்போது உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மேலாக உள்ள பன்மடங்கு மோசமான சட்டமாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் காணப்படுகின்றது.'

- இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

'பொலிஸ் நிலையத்தில் வழங்கப்படும்ஒப்புதல்வாக்கு மூலம் ஆதாரமாக வழக்குத் தொடர்ந்தால்அதைப்பாவிக்க முடியும். இதனால்தான் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட பலர் சித்திர வதைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர்' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு இடையிலானகலந்து ☞2



## தமிழ் எம்.பிக்கள் அரங்கம் அமைக்க தமிழ்க் கட்சிகளுக்கு மனோ அழைப்பு

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் ஒன்றை நாடாளுமன்றத்தில் அமைத்திடும் யோசனையை முன்னிறுத்தி தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., இலங்கைத்தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விடுதலைஇயக்கத்தின்தலைவர்செல்வம்அடைக்கலநாதன் எம்.பி., ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த. சித்தார்த்தன் எம்.பி., தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம்சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. ஆகியோருக்கு மின்னஞ்சல் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர்கள் மற்றும் ☞2



## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தைத்தான் (அதாவது மறைவு தினத்தைத்தான்) நினைவேந்தல் நிகழ்ச்சியாக நடத்துவது வழமை. ஈழத்து காந்தி எனப் போற்றப்படும் தமிழரசு ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வா விடயத்திலும் அதுதான் நிலைப்பாடு. அவரது நினைவு தினம் ஏப்ரல் 26 ஆம் திகதி. அன்றைய தினம் தான் தமிழரசு கட்சி உத்தியோகபூர்வமாக தந்தை செல்வா நினைவேந்தல் நிகழ்வை நடத்தும். தந்தையின் ஜயந்திதினநிகழ்வுகளைமார்ச் 31ஆம் திகதி தமிழரசு ஏற்பாடு செய்வதில்லை. இம்முறையும் ஏற்பாடு செய்யவில்லை.

எனினும் தந்தைசெல்வா நற்பணி மன்றம், தந்தை செல்வா அறங்காவலர் குழு போன்றவை செல்வா ஜயந்தி தினத்தை ஒட்டி நடத்தும் நினைவேந்தல் நிகழ்வுகளில் தமிழரசுத் தலைவர்கள், பிரமுகர்கள் பங்கு பற்றுவது வழமை. அவற்றில் பங்கு பற்றாத - தந்தை செல்வா மீது பற்றுள்ள - கட்சிப் பிரமுகர்கள் தம் பாட்டில் செல்வாவின் நினைவிடத்திற்கு நேரில் சென்றோ, வேறு வழிகளிலோ அன்றைய தினத்தில் தந்தையை நினைவேந்துவது உண்டு.

தந்தை செல்வா அறங்காவலர் குழுவுடன் எப்போதும் நெருங்கிச் செயல்படும் மாவை சேனாதிராசா கடந்த வருடமும் தந்தை செல்வா ஜயந்தி தின நினைவுகளில் அறங்காவலர் குழுவுடன் நினைவிடத்துக்குச் சென்றுதான் நினைவேந்தலில் பங்குபற்றினார். ஆனால் தமிழரசுப் பிரமுகர்கள் சிவஞானம், கனகசபாபதி போன்றோர் கடந்த வருடமும் ஓரணியாகத் தனியாகச் சென்றே ஜயந்தி தின நினைவேந்தலில் பங்குபற்றினர். அப்போது யாரும் அதை கட்சிப் பிரிவு - பிளவு-என்று கூத்திடவில்லை.

இப்போது சிவஞானம் - கனகசபாபதி இடையே சற்று முறுகல் நிலை நிலவுவதால் கனகசபாபதி இம்முறை மாவை சேனாதிராசாவுடன் ஒட்டிக்கொண்டார் போலும். அவ்வளவுதான்.

ஜயந்தி தின நினைவேந்தல் நிகழ்வை தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்த நிலையில், கட்சிப் பிரமுகர்கள் பிரிந்து நின்று அதனை முன்னெடுத்தால் அதைப் பிளவு - பிரிவு - எனலாம். அப்படி ஏதும் இல்லாத நிலை நிலையில் - அதுவும் கட்சித் தலைவர் உள்ளிட்ட தரப்பினர் அப்படியோர் ஜயந்தி தின நினைவேந்தல் நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கவோ, ஒழுங்கு செய்யவோ இல்லாத நிலையில் - அவரவர் தனித்தோ, தத்தமக்கு வசதியான பிற பிரமுகர்களுடன் சேர்ந்தோ சென்று நினைவஞ்சலி செய்வது எப்படிப் பிளவாகும்?

இம்முறை தந்தைசெல்வா ஜயந்திதினம் முக்கியமானது. ஏனெனில் இது அவரது 125 ஆவது பிறந்த தினமாகும்.

எனினும் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தொடர்பில் முக்கிய விடயம் ஒன்று உண்டு.

கட்சித் தலைமையுடன் அவர் இப்போதெல்லாம் முரண்டு பிடித்து நிற்கின்றார் என்பது ஊரறிந்த உண்மை.

கடைசியாக மன்னாரில் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யாழ். மாவட்டக் கிளைக் கூட்டம் போன்றவை எதிலும் அவர் தலை காட்டவில்லை. இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்த சில நிகழ்வுகளில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் என்ற ரீதியில் தான் பங்குபற்ற வேண்டி இருந்தது என்ற காரணத்தைச் சாட்டாகக் காட்டி அவர் ஒதுங்கிக் கொண்டார்.

தான் முன்னின்று, தமிழரசுக் கட்சியின் யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளராக ஒழுங்கு செய்து, அழைத்து வந்த பத்திரிகையாளர் வித்தியாதரனை, அந்த ஏற்பாட்டுக்கு சம்மதம் தெரிவித்து, வட்டார வேட்பாளராக களம் இறக்கிய பின்னர், அவரே மேயர் வேட்பாளர் என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய தேவை வந்தபோது, அதைச் செய்ய மறுத்து, தமது காலை (வித்தியாதரனின் காலையும் சேர்த்து) மாவையரும் சுமந்திரனும் (இப்போது கட்சிக்குள் எதிரெதிர் தரப்பினரான இருவரும், இவ்விடயத்தில் மட்டும் ஒன்றுபட்டு நின்றனர்) வாரி விட்டபோதே, அந்த விசனத்தில் கட்சியின் பிரசார நடவடிக்கைகளில் இருந்து தாம் முற்றாக ஒதுங்கப் போகின்றார் என்று சிவஞானம் கூறி இருந்தார். அப்போக்கு இன்னும் தொடர்கின்றது போலும்.

வித்தியாதரனைப் பொறுத்தவரை, அவர் தம்மைத் தமிழரசின் யாழ். மேயர் வேட்பாளராகக் களம் இறக்க முனைப்புடன் செயல்பட்ட சி.வி.கே.சிவஞானத்துடன் ஒத்திசைவதில் ஆச்சரியம் இல்லை. அதேசமயம், அவர் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைச் செயலாளராக இருந்தபோது தந்தை செல்வா நினைவு தினப் பேருரை நிகழ்வுகளை, முக்கிய பேச்சாளர்களை அழைத்து, நான்கு, ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக - வெகு சிறப்பாக ஏற்பாடு செய்து - நடத்தியவர். அந்த வகையில் தந்தை செல்வா ஜயந்திதின நினைவேந்தலில் அவர் பங்குபற்றுவதும் ஆச்சரியமான விடயம் அல்ல.

அதை ஒட்டி இன்னொரு விடயத்தையும் இதில் சுட்ட வேண்டும். வித்தியாதரன் தமிழரசு கட்சியின் கொழும்புக் கிளைச் செயலாளராக இருந்தபோது, அப்போது ஓய்வு பெற்றிருந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை பேச்சாளராக அழைத்து கதிரேசன் மண்டபத்தில், கொழும்புக் கிளைத் தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராஜா தலைமையில் பெரிய எடுப்பில் தந்தை செல்வா நினைவுப் பேருரையை ஒரு தடவை (2013 ஏப்ரல் 26 ஆம் திகதி) நடத்தி இருந்தார். அந்த நிகழ்வின் போதுதான் நீதியரசர் விக்னேஸ்வரன் - சம்பந்தன் இடையே அரசியல் நெருக்கம் ஏற்பட்டது. அதுவே பின்னர், அந்த ஆண்டு இறுதியில் வடக்கு மாகாண சபை முதல்வர் வேட்பாளராக நீதியரசர் விக்னேஸ்வரனைக் கட்சித் தலைவர் சம்பந்தன் ஒற்றைக்காலில் விடாப்பிடியாக நின்று களமிறக்குவதற்கும் வழி செய்தது. அத்தோடு கட்சிக்குள் இருந்து வித்தியாதரன் ஓரங்கட்டப்பட்டு, ஒதுங்கவும் அதுவே வழி செய்தது.

எது, எப்படியோ தந்தை செல்வா நினைவு நிகழ்வுகள் தமிழரசுக்குள் அதிர்வுகளை ஏற்படுத்துவது வழமைதான் போலும்.

- இடி மின்னல் -

## சட்டவிரோத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட காலமாக சட்ட விரோதமான தொழில் நடவடிக்கைகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் கடற்தொழிலை வாழ்வாதாரமாக கொண்டுள்ள குடும்பங்கள் தொடர்ச்சியாக வருமான இழப்பை எதிர்கொண்டு வாழ்வாதாரத்துக்காக போராடுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒரு சில முதலாளிகள் இவ்வாறான சட்டவிரோத சுருக்குவலை உள்ளிட்ட தொழிலை மேற்கொள்வதால் தொடர்ச்சியாக பல மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்து வருகின்றது

இது தொடர்பாக கடல் தொழில் அமைச்சருக்கு பலமுறை தெரிவித்தும் இது வரை எந்த எந்தவிதமான பலனும் அளிக்கவில்லை.

எனவே இப்பிரச்சினையில் ஜனாதிபதி தலையிட்டு இந்த சட்டவிரோத சுருக்கு வலை தொழில் உள்ளிட்ட தொழில்களை நிறுத்துவதற்கு உடனடியாக ஆவனை செய்ய வேண்டும் எனவும் கடல் தொழிலாளாளர்களின் நலனில் அக்கறை கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அத்தோடு அண்மையிலே கடல் தொழிலிற்கு செல்பவர்கள் கடற்படையிடம் பதிவு செய்யவேண்டும் என்ற நடைமுறையை கடற்தொழில் அமைச்சரே கொண்டு வந்துள்ளமை தொடர்பிலும் அதிருப்தி அடைந்துள்ளோம்.

எமது கடற்பரப்பிலே சட்ட விரோதமான தொழில்கள் பல நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலைமையை கட்டுப்படுத்த முடியாதுள்ள அமைச்சர் தற்போது மீனவர்களை கடற்படை முகாம்களில் பதிந்து தொழிலுக்காக செல்லுமாறு பணித்துள்ளமையானது உண்மையிலேயே மீனவர்களை மேலும் பாதிப்படையச் செய்துள்ளது.

கடல்தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்ற அரசாங்கம் உடனடியாக கடல்தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு சட்டங்கள் நடைமுறைப்படுத்தும் வரை கடற்தொழிலாளார்களுடைய பிரச்சினைகள் என்பது தீர்க்கப்படாத பிரச்சினைகளாகவே காணப்படும்.

எனவே நமது வாழ்வாதாரத்தை அளிக்கின்ற சட்ட விரோதமான சுருக்குவலை தொழில் உள்ளிட்ட தொழில்களை உடனடியாக நிறுத்த வேண்டும். இதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

## வடக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவையெல்லாம் இலங்கை ஆட்சியாளர்களுக்குத் தெரியாமல் நடக்கவில்லை. அனைத்தும் ஆட்சியாளர்களுக்கு தெரிந்தே நடக்கின்றன. இந் நிலையில்தான் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்திருக்கிறோம்.

இதனை தடுத்து நிறுத்த வேண்டும் இவற்றை எதிர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் இன்று 7 தமிழ்க் கட்சிகளும் 22 பொது அமைப்புகளும் இணைந்து நீண்ட நேரம் கலந்துரையாடி முடிவில் சில தீர்மானங்களை எடுத்து இருக்கின்றோம்.

அதாவது ஒரே நாளில் வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் அரசிற்கு எதிராக எதிர்ப்பு நாளை நடைமுறைப்படுத்த தீர்மானித்து உள்ளோம். அதனை இந்த ஏப்ரல் மாதத்திற்குள் ஒரு திகதியில் செய்ய இருக்கின்றோம்.

அதனை செயல்படுத்துவதற்கு ஒரு செயற்குழு ஒன்றையும் நியமித்திருக்கின்றோம். இந்த விடயங்கள் சம்பந்தமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள பல தரப்பினர்களுடனும் பேசி போராட்டம் நடத்தும் திகதி தொடர்பில் நாம் அறிவிப்போம்.

அத்தோடு இந்த எதிர்ப்புப் போராட்டம் சம்பந்தமாக சுவரொட்டிகள் துண்டு பிரசுரங்கள் ஊடாக மக்கள் மத்தியில் எமது பிரச்சாரங்களை முன்னெடுக்க இருக்கின்றோம். இன்றைக்கு அரசின் செயற்பாடுகளால் தமிழ் மக்களின் கௌரவம் கேள்விக்குறியாகுகின்றது.

ஆகையினால் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாம் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம். நாம் இன்று நியமித்திருக்கின்ற அந்த செயற்குழு வடகிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக தனது பணிகளை முன்னெடுக்க உள்ளது - என்றார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அழைப்பின் பேரில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, ஈபிஆர்எல்எப் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தா உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மதத்தலைவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## சீன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட நேரம் விசாரணை நடத்தப்படும் என்று அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

## தேர்தலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைக் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சந்தித்துக் கலந்துரையாட விடுத்த கோரிக்கைக்கு இன்னும் பதிலளிக்கப்படவில்லை.

## வெடுக்குநாறி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகள் நேற்றுக் காலையில் இருந்து நடைபெற்றன. அங்கு வந்த தொல்பொருள் திணைக்களத்தினர் அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்கள் தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்துகின்றனர் என்று பொலிஸாருக்கு எழுத்து மூலம் வழங்கிய முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மூவரைக் கைது செய்தனர்.

அத்துடன், பிள்ளையார், முருகன் உள்ளிட்ட ஏனைய விக்கிரகங்களையும் எடுத்துச் செல்ல முற்பட்டனர். நான் ஆலயத்தில் நின்றமையால் விக்கிரங்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை.

பொலிஸாருடன் கடுமையாகத் தர்க்கத்தில் ஈடுபட்டு ஒரு தொகுதி விக்கிரகங்களை அங்கிருந்துஎனது வாகனத்தில் கொண்டு வந்து வேறு ஒரு ஆலயத்தில் தற்காலிகமாக வைத்துள்ளோம்.

கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனும், அவர் ஊடாக பொலிஸ் மா அதிபர் ஆகியோருடனும் பேசியிருந்தேன். நீண்ட இழுபறியின் பின் கைது செய்யப்பட்ட மூவரும் விடுவிக்கப்பட்டனர்.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் மற்றும் வடக்குமாகாணபிரதிப்பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோர் வெடுக்குநாறி மலைக்கு நாளை (இன்று) வருகை தரவுள்ளனர். இதன்போது குறித்த ஆலய பிரதிஷ்டை தொடர்பில் தீர்க்கமான முடிவு எட்டப்பட்டு ஆலய பிரதிஷ்டை விரைவாக இடம்பெறும் -

## நான் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்றும், புதிய சிந்தனைகளுடன் புதிய பயணத்தைத் தொடர்ந்தால் 25 வருடங்களுக்குள் பெரும் அபிருத்தியை அடைய முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை வெற்றி கொண்டது போன்றே நாட்டின் பொருளாதார யுத்தத்தையும் வெற்றிகொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த துரித நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

அதற்காக முப்படைகளினதும் பொலிஸாரினதும் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக தேவையென வலியுறுத்திய ஜனாதிபதி, சட்டம், ஒழுங்கை பாதுகாக்க கடந்த காலங்களில் படையினர் வழங்கிய ஒத்துழைப்புக்களையும் பாராட்டினார்.

முப்படையினர் இந்தப் பணியை செய்யத் தவறியிருந்தால் இன்று நாடு வன்முறை நிறைந்த பூமியமாக இருந்திருக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதேபோல் உலகின் பலம்வாய்ந்த நாடுகளுக்கிடையில் இடையிலான போட்டித் தன்மை, இந்து சமுத்திர வலயத்தை பெரிதும் பாதிக்கும் எனவும், இலங்கையின் ஜனாதிபதி என்ற வகையில் அந்தப் பாதிப்பிலிருந்து இலங்கையை மீட்க முயற்சிப்பதாகவும் அவர் கூறினார்.

நடத்து முடிந்த போராட்டங்களை போல் அல்லாது எதிர்காலத்தில் வரவிருக்கும் இந்தப் போராட்டங்கள் தொழில்நுட்பத்தை மையப்படுத்தியதாக அமையும் என வலியுறுத்திய ஜனாதிபதி, தொழில்நுட்பத் தெரிவுடன் கூடிய முப்படையினரை உருவாக்குவதற்காகவே ''பாதுகாப்பு''2023' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், சட்டம் - ஒழுங்கு மற்றும் நீதி அமைச்சர்களுக்கு இது தொடர்பான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காகப் படையினரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வு) ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி வைஸ் எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரால் பிரியந்த பெரேரா, பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் 1,200 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## பன்மடங்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரையாடல், யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற் குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இராணுவத்துக்கு மிகவும் பலத்தை வழங்குகின்றது. இராணுவம் கைது செய்வதற்கு உரிமையை வழங்குகின்றது, ஒரு வாகனத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிமை வழங்குகின்றது.

அத்துடன் தடுப்பணை, தற்போது உள்ள சரத்தின்படி பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுமதி வழங்க முடியும், தற்போது உள்ள புதுச் சட்டம், ஜனாதிபதிக்கான அதிகாரத்தில் மேலும் மக்கள் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் நுழைவதற்கு மீது தடை விதிக்கின்றது.

அதனை வர்த்தமானியில் பிரசுரிக்க முடியும். அது நீண்ட காலத்துக்குத் தொடர்ச்சியாக வர்த்தமானி மூலம் பிரசுரிக்க முடியும். ஒரு நிறுவனம் அல்லது ஒரு குழுவைத் தடை செய்யப்பட்ட அமைப்பாகத் தீர்மானிக்க முடியும் அத்துடன் வர்த்தமானியில் வெளியிடவும் முடியும்.

அதற்குப் பொலிஸ் அதிபர் பரிந்துரை செய்ய வேண்டும் எனக் கூறப்படுகின்றது. உண்மையில் இந்தச் சட்டம் நீதித்துறையின் ஏற்பாடுகள் அன்றி காணப்படுகின்றது - என்றார்.

## தமிழ் எம். .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான பழனி திகாம்பரம் எம்.பி., வே. இராதாகிருஷ்ணன் எம்.பி. ஆகியோரின் உடன்பாட்டுடன் இந்த அழைப்பை த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. ஊடகங்களிடம் கூறியதாவது:-

'முதற்கட்டமாக மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., சித்தார்த்தன் எம்.பி., சிவி.விக்னேஸ்வரன் எம்.பி. ஆகியோருக்கு அவர்களது கட்சிப் பதவிகளை விளித்து இந்த அழைப்பை விடுத்துள்ளேன். தொலைபேசியிலும் உரையாடியுள்ளேன்.

எமது கூட்டணியின் தலைமைக் குழு உறுப்பினர்களான பழனி திகாம்பரம் எம்.பி., வே.இராதாகிருஷ்ணன் எம்.பி. ஆகியோரிடமும் உரையாடி உள்ளேன்.

எனது நோக்கம், இலங்கை நாடாளுமன்றத்தில், தமிழ் நாடாளுமன்ற அரங்கம் என்ற அமைப்பை உருவாக்குவதாகும். இது பற்றி நான் பல்லாண்டுகளுக்கு முன்பே கலந்துரையாடியுள்ளேன். எனினும் அன்று நிலவிய அரசியல் சூழல் காரணமாக அது அன்று சாத்தியமாகவில்லை. இன்று அதற்கான சாதகமான அரசியல் சூழல் உருவாகி வருகின்றது என நினைக்கின்றேன்.

இது பற்றி கொழும்பில் வாழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பியையும் சந்தித்து உரையாட முடிவு செய்துள்ளேன்.

நம் நாடு இன்று சந்தித்துள்ள தேசிய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வைத் தேட இலங்கை அரசும், அதற்குத் துணையாக சர்வதேச சமூகமும் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இந்த முயற்சிகளை வரவேற்கும் அதேவேளை, பொருளாதார மீட்சியுடன் நின்றுவிடாமல், தேசிய நெருக்கடிக்கு மூலகாரணமான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தேடலும், இதனுடன் சமாந்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் ஈழத்தமிழ் சகோதரர்களின் தனித்துவ அரசியல் அபிலாஷைகளையும், தென்னிலங்கையில் வாழும் மலையக தமிழ் மக்களின் தனித்துவ அரசியல் அபிலாஷைகளையும் அடிப்படையாகக் கொண்டு, இலங்கை அரசுடன் அரசியல் பேச்சுகளை தனித்தனியாக முன்னெடுக்க, அவ்வந்த மக்களின் ஆணையைப் பெற்ற அரசியல் கட்சிகளின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.

அரசியல் தீர்வு பேச்சுகளை, தமிழ் நாடாளுமன்ற அரங்கத்தின் மூலம் முன்னெடுக்கும் நோக்கம் எனக்குக் கிடையாது.

இலங்கை நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் இன்று அன்றாடம் எதிர்கொள்ளும் சமகால நெருக்கடி பிரச்சினைகளையும், தேசிய இனப்பிரச்சினைக்குக் காணப்படக்கூடிய தீர்வு எதுவாக இருந்தாலும், அவற்றுக்கான முதன்மை தேவையாக, ''இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு'' என்ற அடிப்படை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதையும், அனைத்துப் பெரும்பான்மை தேசிய கட்சிகளுக்கும் நேரடியாக அறிவிக்கவும், சிங்கள சகோதர பெருந்திரளினருக்கு, அவர்களைப் பிரதிநிதித்து வப்படுத்துவதாக கூறும் அரசியல் கட்சிகளைத் தாண்டி, நேரடியாக விளக்கமளிக்கவும், இவை தொடர்பான எமது கூட்டு செய்தியை சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை அபிவிருத்தி பங்காளர்களுக்கும் தெரிவிக்கவும் தமிழ் நாடாளுமன்ற அரங்கம் முன்முயற்சிகளை எடுக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். இந்த முயற்சியில் இன்னமும் பல தமிழ் கட்சிகளை இணைத்துக்கொள்ள வேண்டும், முஸ்லிம் சகோதரர் களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும் ஆகிய யோசனைகள் இருக்கின்றன.

அவற்றை எதிர்காலத்தில் கவனிக்க வேண்டும் என விரும்புகின்றேன். தற்போது அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் கட்சிகளின் தலைவர்களது அதிகாரபூர்வ பதில்களை அடுத்தே இது தொடர்பிலெனது அடுத்த கட்ட நடவடிக்கைகள் அமையும்.' - என்றார்.






# ஆக்கிரமிப்பு நோக்குடன் புனைவை செய்கிறது தொல்லியல் திணைக்களம்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் ஜனாதிபதிக்குக் கடிதம்

அறிவியல் ஒழுக்கத்தின்படியான வரலாற்று ஆய்வுகளுக்குப் பதிலாக, அதற்கு மாறான முறையில் ஆக்கிரமிப்பு நோக்குடன் வரலாற்றுப் புனைவைச் செய்யும் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைககளை உடனடியாக நிறுத்தி நாட்டை ஆபத்திலிருந்து பாது காக்க நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக்கடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இனப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி போன்றவற்றினால் நாடு பலவிதமான துயரங்களில் புதையுண்டு போயிருக்கும் சூழலில், இவற்றிலிருந்து மீண்டெழுவதற்குப்பதிலாகமேலும் தீயை மூட்டுவதா கவும் புதைசேற்றில் அமிழ்த்துவதாகவுமே தொல்லியல் திணைக்களம் செயற்படுவருகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் நாடு தத்தளித்துக்கொண்டிருக்கும் போது மத முரண்பாடுகளையும் உருவாக்குவது மிகப் பெரிய பின்னடைவையே தரும். மதங்களின் முரண், இன முரணையும் விட மிக அபாயகரமானது, மிக ஆபத்தான ஒரு விசப் பூண்டாகும். உலகிலேயே ஆகப்பெரியதீவினைஎன்றால், அது மதங்களுக்கிடையே உருவாகும் பூசலும் மோதலுமே. இதனால்வரலாற்றில் பல கோடிப் பேரின் உயிர்கள் பலியிடப்பட்டுள்ளது. உலகெங்கும்மதங்களின்மோதல் நடந்த காலம் அநேகமாக முடிந்து விட்டது. ஆனால் இலங்கையில் அது உயிர்ப்படையப் போகிறதா என்ற அச்சம் ஏற்படுகிறது.

ஏனென்றால் கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் வடக்குக்கிழக்கில்தொல்லியல் திணைக்களத்தினாலும் படையினராலும்மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல் - இனமுரண், மதமுரண் - நடவடிக்கைகளை கீழே அட்டவணைப்படுத்துகிறோம்.

1. நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி குருந்தூர் மலையில்விஹாரைஅமைக்கப்பட்டமை.

2. பொத்துவில் பிரதேச செயலாளரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட தாண்டியடி சங்கமன்கண்டி படிமலை அடிவாரத்திலேயே இரவோடு இரவாக புத்தர் சிலை வைக்கப்பட்டமை.

3. வவுனியா வடக்கு ஊற்றுக்குளம்பகுதியில்புத்தர் சிலை அமைக்கப்பட்டமை.

4. யாழ்ப்பாணம்நெடுந்தீவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெடியரசன் கோட்டை தொல்லியல் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது.

5. நெடுங்கேணியில் வெடுக்குநாறிமலையில் அமைந்திருந்த ஆதிசிவன் கோவில் இரவோடிரவாக அழிக்கப்பட்டிருப்பது.

6. கச்சதீவில்புத்தர்சிலை அமைக்கப்பட்டுள்ளமை.

இந்த நடவடிக்கைகள் தமிழ், முஸ்லிம் மக்களிடம் பதட்டத்தையும் கொந்தளிப்பையும் உருவாகி யுள்ளன. இது மேலும் தொடருமாக இருந்தால்இலங்கைச்சமூகங்கள் மேலும்மேலும் பிளவுண்டு செல்வதற்கே வழிவகுக்கும். அப்படிச் சமூகங்கள் பிளவுண்டால் அதை வெளிச்சக்திகள் தமக்கு வாய்ப்பாகப்பயன்படுத்திக் கொள்ளும்.

இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு. பல மதங்களுக்குரிய தேசம். பல் பண்பாட்டுக்குரிய இடம் என்பதற்குப் பதிலாக, நாட்டில் ஐக்கியத்தையும் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கி அதைக் கட்டியெழுப்புவதற்குப்பதிலாக தமிழ், முஸ்லிம் சமூகங்களைக் கலவரப்படுத்தும் வகையிலேயேமேற்படிதொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் உள்ளன.

அறிவியல்ஒழுக்கத்தின்படியான வரலாற்று ஆய்வுகளுக்குப் பதிலாக, அதற்கு மாறான முறையில் ஆக்கிரமிப்புநோக்குடன்வரலாற்றுப் புனைவைச் செய்யும் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் நிர்வாக நடைமுறைக்கும் முரணானதாக உள்ளது. அத்துடன், வரலாற்று ஆய்வாளர்கள், அறிஞர்களின் ஆய்வுக்கும் நிலைப்பாட்டுக்கும்மாறாகவே இந்த நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

மேலும் நாடு இன்றுள்ள சூழலில் இத்தகைய சிலைகளை அமைக்கும் நடவடிக்கைள் அவசியமா?

நாட்டில் தொழிற்சாலைகளையும் உற்பத்தி மையங்களையும் உருவாக்குவதற்குப் பதிலாக இனமுரணை ஏற்படுத்தும் விதமாகதொல்லியல்திணைக்களம்செயற்படுவதுமிகமிகத் தவறானது. இது மேலும் பாரதூரமான பின்னடைவுகளையும் பின்விளைவுகளையும் உருவாக்கும். எனவே இது தொடர்பாக தாங்கள் உடனடியான இவற்றைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு நம்பிக்கையைக்கட்டியெழுப்பவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் என குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## மன்னாரில் 16 கிலோ கஞ்சா மாட்டியது

மன்னாரில் 16 கிலோ கேரள கஞ்சா பொதிகளுடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றப்புலனாய்வுபிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார்மாவட்ட குற்றப்புலனாய்வுபிரிவுக்குகிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மன்னார், கொன்வன்ற் வீதியில் ஒருவரும், மன்னார் - தலைமன்னார் பிரதானவீதியில்உள்ளவிசேட அதிரடிப்படை முகாமுக்கு அருகில் மற்றொருவரும் என இரு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 16 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, மன்னார், ஜே.ஆர்.எஸ். வீட்டுத் திட்டம் சின்னக்கடையைசேர்ந்த 37 வயது நபரிடமிருந்து 6 கிலோ 30 கிராம் கேரள கஞ்சாவும், கட்டுக்காரன் குடியிருப்பை சேர்ந்த 28 வயது நபரின் கெப் வாகனத்திலிருந்து 10 கிலோ 60 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களிடம்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் கைப்பற்றப்பட்ட கேரளகஞ்சாமற்றும்சந்தேகநபர்கள் மற்றும் அவர்களது வாகனங்களை மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மேலும் 10 லட்சம் முட்டைகள் வந்தன

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 10 இலட்சம் முட்டைகள்கொழும்புதுறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த முட்டைகளின் தரம் தொடர்பில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதி பெறப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வாலிசுந்தர தெரிவித்துள்ளார்.

அனுமதி கிடைத்தவுடன் பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்களுக்குஇந்தமுட்டைகளை விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனித உரிமைகள் எனும் கானல் நீர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவினால் அடையாளங்காணப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளன சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள். ஐ.நா. குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துமாறும் கோரியுள்ளன.

என்கிற செய்தியைப் பார்க்கும்போது இன்னுமா இந்த உலகம் இலங்கையை நம்புகின்றது என்றே கேட்கத் தோன்றுகின்றது.

இலங்கையில் பல வருடகாலமாகத் திட்டமிட்ட வகையிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவது ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் அறிக்கையின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 'தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் சமூகத்தைச் சேர்ந்த சந்தேகநபர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள் மற்றும் பாலியல் அத்துமீறல்கள் என்பன தொடர்பில் இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை.

அதேபோன்று அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரால் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் முக்கிய மனித உரிமைகள் வழக்கு விசாரணைகளுக்குத் தடையேற்படுத்தப்பட்டுள்ளன.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளுக்குப் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருக்கும் அதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்ந்து அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை வெளிப்படுத்துவதில் எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை' என்பன தொடர்பில் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு அவதானம் செலுத்தியிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து அவதானம் செலுத்தப்படாமல் இருப்பது இனியும் தொடரக்கூடாது எனவும், இவ்விவகாரங்களை உரியவாறு கையாள்வதற்கும், இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கும், அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இவையெல்லாவற்றையும் இலங்கையின் ஆட்சியாளர்கள் அதுவும் இப்போது பதவியில் இருப்பவரான அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 2015ஆம் ஆண்டிலேயே ஏற்றுக்கொண்டார். அதனால்தான் அப்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அவர் அப்போது தலைமை அமைச்சராக இருந்த ஆட்சி இணை அனுசரணையும் வழங்கியது. ஆனால், இன்று வரையில் அதனை அவர் நிறைவேற்றியதில்லை. அப்படி நிறைவேற்றுவதற்கான கடப்பாடு தனக்கிருப்பதாகக் காட்டிக்கொண்டதும் இல்லை. வாய்ச் சொல்லில் மட்டும் அவ்வப்போது, அதுவும் ஐ.நா. கூட்டத் தொடர்களின்போது அது பற்றிப் பேசுவது தவிர வேறெதுவும் செய்ததில்லை.

2019ஆம் ஆண்டிலேயே தாம் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்தை இலங்கை போன்ற ஒரு நாட்டிலல் செயற்படுத்த முடியாது என்று வெளிப்படையாகவும் கூறியவர். அத்தகையவர் இப்போது மட்டும் ஐ.நாவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்ப்பது நடக்கக்கூடியதல்ல. அவது வெறும் கானல் நீர்.

# மக்கள் ஐ.தே.கவுக்கு வாக்களிக்காவிட்டால் பழைய யுகத்திற்கே திரும்பிச்செல்ல நேரிடும்

### மிரட்டுகிறார் பாலித ரங்கே பண்டார



அடுத்துவரும் தேர்தல்களில் மக்கள் ஐ.தே.க.வுக்கு வாக்களிக்காவிட்டால் மீண்டும் பழைய யுகத்திற்கே செல்ல நேரிடும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். ஐ.தே.கவை தோல்வியடைச் செய்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாட்டு மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதை நினைவில்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார்.

தேர்தல்தொடர்பில்கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலை நடத்துவதில் காணப்படும் பிரதான தடை நிதி நெருக்கடியாகும். எனவே பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டதன் பின்னர் தேர்தல் இடம்பெறும்.

பொறுப்பை ஏற்பதற்கு அஞ்சி ஓடியவர்களுக்கு மத்தியில் தனி நபராக ஆட்சியைப் பொறுப்பேற்றுஇன்றுஜனாதிபதி வெற்றிபெற்றுள்ளார். எனவே சில்லறை தேர்தல்களை நடத்திக் கொண்டிருப்பதை விட ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பொருத்தமானது. அதன்ஊடாகச்சவாலைஏற்கக் கூடியவர்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு நாட்டை ஒப்படைக்க முடியும்.

இன்று நாட்டில் 28 இலட்சம் குடும்பங்கள் உண்பதற்கு உணவைப் பெற்றுக் கொள்வதில் கூட கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. அவ்வாறிருக்கையில் தேர்தலை நடத்துவதன் மூலம் இவர்களுக்கு உணவை வழங்க முடியுமா? ஜே.வி.பி., ஐ.ம.ச. குறித்து வீணாகக் கலவரமடையத் தேவையில்லை. ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பி.யும் மின விரைவாக சரிவை சந்தித்துள்ளன. இனிவரும் நாட்களில் ஐக்கிய மக்கள் சக்தியில் அதன் தலைவரும் பொதுச் செயலாளரும் மாத்திரமே எஞ்சுவர்.

தேர்தலில் போட்டியிட வுள்ள கூட்டணிகள் முக்கியத்துவ முடையவையல்ல. மாறாக தேர் தலில் போட்டியிடும் நபர் யார் என்பதற்கே முக்கியத்துவமளிக்க வேண்டும். அனைவரையும் ஒன்றிணைந்துஅபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்றுவதே எமது இலக்காகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே இதனைச் செய்யமுடியும்.

அடுத்துவரும்எந்தவொரு தேர்தலிலும் ஐக்கிய தேசிய கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டும். காரணம் ஐ.தே.க.வை தோல்வியடைச் செய்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாட்டு மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மக்கள் ஐ.தே.க.வுக்கு வாக்களிக்காவிட்டால்மீண்டும் பழைய யுகத்திற்கே செல்ல நேரிடும் - என்றார்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அவசரமாக ஏன் நிறைவேற்றவேண்டும்?

### ஐக்கிய மக்கள் சகசக்தி கேள்வி

புதியபயங்கரவாதஎதிர்ப்பு சட்டத்தினை அவசரமான நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஏன் முயற்சிக்கிறது? பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்டிருக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அதனை உதாசீனப் படுத்திய அரசாங்கம் தற்போது ஆர்ப்பாட்டங்களை முடக்குவதற்காக இந்த சட்டத்தை பயன்படுத்த முயற்சிப்பதுஜனநாயகத்திற்குபாரிய அச்சுறுத்தலாகும் என ஐக்கிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சிதலைவர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதியபயங்கரவாதஎதிர்ப்பு சட்டத்தினை அவசரமாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதனை தயாரித்துள்ளமையின் நோக்கம் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராகவோ, தேசிய பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டோ அல்ல. அரசாங்கத்தின்பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவா அந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது.



தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை முடக்குவதற்காகவே இதனை அறிமுகப் படுத்தியுள்ளனர். நியாயமான தொழிற்சங்க நடவடிக்கைகளைப் போன்று நியாய மற்ற தொழிற்சங்க நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் இவற்றை சட்டமொன்றின்ஊடாகமுடக்கமுயற்சிப்பது ஜனநாயகத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாகும்.

உண்மையில் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எதிராகசெயற்பட்டிருக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அதனை உதாசீனப்படுத்தியது. உயிர்த்தஞாயிறுதாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை இன்னும் இனங்காண முடியாமலுள்ளது. இது தொடர்பில்நாம்தொடர்ந்தும்வலியுறுத்தியுள்ளோம். தற்போது சாரா ஜெஸ்மினும் உயிரிழந்துவிட்டார்எனக்கூறுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு விவகாரத்தில் உண்மைகளை மறைப்பதற்கு முற்படாமல், பிரதான சூத்திரதாரிகளை இனங்கண்டு அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றார்.

# இருநூறு வருடங்களாகியும் மலையக மண் மீள்வதற்கான கொள்ளைத் திட்டம் இல்லை

### - கண்டி மாவட்ட எம்.பி. வேலுகுமார் ஆதங்கம்

'மலையகம் 200 என்பது வெறும் ஒரு நிகழ்வு அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும். மலையகம் 200ஐ மையப்படுத்தியாவதுமலையக மக்களின் விடுதலைக்கான கொள்கைத் திட்டமொன்றை உருவாக்கப்பட வேண்டும்.'

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது மலையகம் 200 தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார் .

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்துவரப் பட்டு 200 ஆண்டுகள் ஆகின்றன. இதனை முன்னிட்டு நாடு முழுவதும் பல் வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாது கடல் கடந்தும் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.இவைஅனைத்தும் வரவேற்கத்தக்கவைகள்.

எனினும், மலையகம் 200 என்பது வெறும் நிகழ்வல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு இருநூறு ஆண்டுகள் ஆகின்றன. இருநூறு ஆண்டுகள் கடந்து இன்று எமது மக்களின் நிலை என்ன என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது.

அதேவேளைஎங்களைப் போன்றேஇந்தியாவில்இருந்து வேறு நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டவர்களின் இன்றைய நிலைமை என்ன என்பதையும் நாம் ஆராய வேண்டியுள்ளது. அவ்வாறு ஏனைய நாடுகளுக்கு சென்றவர்கள் இன்று அந்நாடுகளில் உள்ளஏனையசமூகங்களுக்கு சமனானவர்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களது சமூக, பொருளாதார நிலைமைகள் உயர்வான மட்டத்தில் உள்ளது. எனினும்நாம்எங்கே இருக்கின்றோம் என்பது முக்கியமானதாகும்.



இன்றும் எமது மக்கள் தோட்ட நிர்வாகத்தால் கட்டுப்படுத்தப்பட்டவர்களாக உள்ளனர். தொழில்நிலையில், தொழில் முறையில் எவ்வித மாற்றமும் இல்லை. குடியிருப்புகள் இன்றும் அன்று உருவாக்கப்பட்ட லயன் அறைகளே. கல்வி, சுகாதாரம், அரச நிர்வாகம் என எல்லாவற்றிலும்பாராபட்சமான நிலையே தொடர்கின்றது.

இன்று நாட்டிலே எடுக்கப்படுகின்ற எல்லா புள்ளி விபரங்களிலும்எமதுசமூகமே கீழ் நிலையில் இருக்கின்றது. இருநூறு ஆண்டுகள் கடந்து, இன்றும் கூட இந்நிலைமையில் இருந்து மீள்வதற்கான கொள்கை திட்டம் ஒன்று இல்லை. வேலைத்திட்டம் ஒன்றும்இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் அரசியல் தலைமைகள் மலையகம் 200 ஐ முற்போக்காகப் பார்க்க வேண்டும். அதனை விடுத்து அதனை ஒருநாள் நிகழ்வாக காட்டி, மக்களை திரட்டி, நிகழ்வு நடத்துவது, இன்னும் நாம் பிற்போக்கு சிந்தனையில் இருந்து மீளவில்லை என்பதையே காட்டுகின்றது.

மலையகம் 200 இனை மையப்படுத்தியாவது மலையக மக்களின் விடுதலைக்கான கொள்கைத் திட்டமொன்றை உருவாக்க முன்வாருங்கள். அதன் அடிப்படையில் மலையக மக்களின் வாழ்க்கைநிலையை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டம் ஒன்றை முன்வையுங்கள். அதுவே மலையகம் 200 இல் ஆக்கபூர்வமான முன்னெடுப்பாக அமையும். அவ்வாறில்லாது நாம் இதே போல பயணிப்போமாயின் மலையக சமூகத்தின் எதிர்காலம் என்பது இன்று போல் நாளையும் கேள்விக்குறியாகவே அமையும்.' - என்றார்.

OKAYA ELECTRIC VEHICLES

dsl
We lead the way...!

பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

The inEVitable
Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம் 3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# எங்களில் ஒருத்தி !

## சிறுகதை

### அத்தியாயம் - 01

செல்லிதாசன்

எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது! நல்லூரில் இருந்து எனது மூத்த சகோதரியின் வீட்டுக்குள் திடீரென நான் காலடிவைத்தபோதே அந்த ஆச்சரியத்தை சந்திக்க வேண்டியிருந்தது.

புதுப்பிக்கப்பட்ட நாற்சார் வீடு. நடுவிறாந்தையில் அழகான சோபா செற்றி போடப்பட்டிருந்தது. அப்படிப் போட்டிருந்த குஷன் கதிரையொன்றில் அமர்ந்தபடி, எனது சிறுபராயத்து பள்ளிக்கூடத்தோழனும், 'கந்தன்' என எனது அக்காவால் அன்று அழைக்கப்பட்ட கந்தசாமி, வெள்ளி ரம்ளரை கையில் வைத்திருந்தபடி தேனீர் அருந்திக் கொண்டிருந்தான்.

அவனுக்கு எதிராக போடப்பட்டிருந்த ஈசிச்சியரில் எனது மூத்த அக்கா சாய்ந்திருந்தபடி அவனுடன் கதைத்துக் கொண்டிருந்தா. எழுபது வயதை எட்டிவிட்ட அக்காவுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுவிட்டதென தொலைபேசி அழைப்பு வந்ததால் திருகோணமலையிலிருந்து நான் அங்கு சென்றிருந்தேன்.

எனது அக்கா முனகி முனகியபடி கந்தசாமியுடன் மெல்லிய குரலில் கதைத்துக்கொண்டிருந்தா. வீட்டு வாசலில் என்னைக்கண்ட கந்தசாமி ''வாங்கோ தம்பி பாலன், உங்கடை அக்கா சொன்னவ நீங்கள் இண்டைக்கு திருகோணமலையிலை இருந்து வருவீங்களெண்டு'' எனக்கூறியபடி வரவேற்றான்.

''தம்பி வந்திட்டானே, தம்பி பாலா உனக்கு ஆறேழு வருஷத்துக்குப் பிறகு இப்பதான் என்ர நினைப்பு வந்ததாக்கும். அதுவும் நான் ரெலிபோன் செய்து கூப்பிடாட்டி இப்பவும் நீ வந்திருக்கமாட்டா'' அக்கா என்னைக்கண்ட ஆதங்கத்தில் ஏதோ கொட்டித்தீர்த்தாள்.

பயணத்தின் இடையில் முருகண்டியில் பஸ் நிற்பாட்டப்பட்டபோது, அக்காவுக்காக வாங்கிய அப்பிள், தோடம்பழங்களை அக்காவின் கைகளுக்குள் வைத்துவிட்டு, முருகண்டியில் வாங்கிய கச்சான் கடலைப்பையை எடுத்து பாலனுக்குக் கொடுத்தேன். ''தம்பி குளிச்சிட்டு வரப்போறியோ, இல்லை தேத்தண்ணியை குடிச்சுப்போட்டு குளிக்கப்போறியோ'' அக்கா என்னைப் பார்த்துக் கேட்டா.

''களைப்பா இருக்கக்கா, தேத்தண்ணி ஒண்டு குடிச்சாத்தான் உசாராயிருக்கும். பிறகு குளிப்பம். உங்களுக்கு ஏலாது எப்படி தேத்தண்ணி வைக்கப்போறியள்'' எனக்கூறியபடி எழுந்தநான், நானே தேனீரைத் தயாரிக்கும் நோக்கில் குசினிப்பக்கம் போனேன்.

அங்கே ஒரு இளம்பெண் நின்று சமைத்துக் கொண்டிருந்தாள். ''யாரக்கா உந்தப்பிள்ளை? வேலைக்கு நிண்ட மனிசி திடீரென்று விட்டிட்டுப் போட்டாள் எண்டு போனமாசம் ரெலிபோனிலை சொன்னீங்கள். இதார் புதிசா ஒருபிள்ளை'' என்று அக்காவிடம் விசாரிக்க,

''வேறையார் தம்பி, உந்த கந்தசாமியின்ரை இளையவள்தான் அவள். கார்த்திகா இங்கை வந்து ஒரு கிழமையாச்சு'' அக்கா சொல்வதைக் கேட்ட எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

காலம் எப்படி எப்படியெல்லாம் மாறிக்கொண்டு வருகுது என நினைக்க மனசுக்குள்ளை ஒருபுறம் சந்தோஷமாக இருந்தாலும், சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகளால் அக்கா போன்றவர்கள் எப்படியெல்லாம் மாறிவிட்டார்கள், மாற்றப்பட்டு விட்டார்கள் என நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

கந்தன் என்ற கந்தசாமிக்கு எனது வயதுதான் இருக்கும். நானும் அவனும் ஆறாம் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்புவரை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். வகுப்பு ஒன்பதுக்குப்பின் கந்தசாமி வறுமை காரணமாக தனது படிப்பை கைவிட்டு தகப்பனாருடன் கூலிவேலை செய்ய கிளம்பிவிட்டான்.

கந்தசாமி எனது அயலூரான கலட்டியிலும், நான் தலையாழி என்ற சிற்றூரிலும் வசித்து வந்தோம். என்னை எனது ஐயா (தந்தையாரை அப்பொழுது நாம் ஐயா என்றே அழைத்து வந்தோம்) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலேயே சேர்த்துவிட முயற்சியெடுத்தார். எனது அண்ணன்மார் இருவர் அங்கு படித்தபோதும் எனக்கு அங்கு அனுமதி கிடைக்கவில்லை. அதனால் என்னை திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியில் அய்யா மனமின்றி சேர்த்துவிட்டார். ஆறாம் வகுப்பில் அங்கு சேர்க்கப்பட்ட நான், அதற்கு முந்திய அரிவரி தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை கலட்டியிலிருந்த மெதடிஸ்மிசன் பாடசாலையில் படித்தேன். ஆனாலும் இவ் இரு பாடசாலைகளிலும் நான் படிப்பதுபற்றி அய்யாவுக்கு கொஞ்சமும் விருப்பமில்லாமல் இருந்தது.

மெதடிஸ்மிசன் பாடசாலையிலும், பரமேஸ்வராக் கல்லூரியிலும் எல்லாச் சாதியைச் சேர்ந்தவர்களும் சரிசமனாக சேர்ந்து படித்துவந்தனர். உயர்சாதி மனப்பான்மையில் பரம்பரையாக ஊறித்திளைத்த எனது தகப்பனாருக்கு இதுவெல்லாம் பிடிக்கவில்லை. எல்லாச் சாதிப்பிள்ளையளோடையும் சேர்ந்து படித்தால் நான் கெட்டுப்போவனென்பதுடன், குடும்பமரியாதையும் குடிமூழ்கிப் போய்விடும் என்பதும் அவரது எண்ணமாயிருந்தது. என்ன செய்வதென அறியாத ஒருநிலையில் எனது தந்தையார் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்த்தாலும், எல்லோருடனும் நான் பழகுவதில் மிகவும் கண்டிப்பாகவும் நடந்து கொண்டார்.

என்னோடு பல ஏழைச்சிறுவர்கள் படித்து வந்தனர். அவர்களுள் கந்தசாமியும் ஒருவன். நாம் இருவரும் மிக நெருக்கமான நண்பர்களாகி பழகிவந்தோம். ஆனாலும் எனது தகப்பனார் முன்னால் அந்த நட்பை காட்டிக்கொள்ளாமல் நான் நடந்துவந்தேன்.

கந்தசாமியின் தகப்பனார் வேலு, சாதாரண அன்றாடம் கூலியாக வேலை செய்துவந்தார். அவருக்கு அன்றாடம் கிடைக்கும் கூலியிலேயே அவரது எட்டுப்பேர் கொண்ட குடும்பம் அரைப்பட்டினியோடை சீவித்துவந்தது.

பெரும்பாலும் வேலு எனது தகப்பனாரின் காய்கறித் தோட்டத்தில்தான் வேலைசெய்து வந்தார். எனது தகப்பனார் தொலைவிலே வருவதைக் கண்டால் வேலு மிகமரியாதையாக தோளில் இருக்கும் துண்டை எடுத்து கமக்கட்டில் வைத்தபடி மிக பயபக்தியுடன் நிற்பார். இதையெல்லாம் பார்க்கும் எனக்கு அந்தச் சிறுவயதிலேயே கோபம் கோபமாக வரும். வேலை செய்துதானே வேலு சம்பளம் வாங்கிறார். அதுக்கேன் இப்படி அவர் எனது தகப்பனாரின் முன்னால் கூனிக்குறுகி நிற்கவேணுமெண்டு எனக்குள் கேள்வி எழும்.

வேலு எங்கள் வீட்டுக்கும் இடைக்கிடை வருவார். விறகு கொத்திறது, கதியால் போடுறது, வேலியடைக்கிறது, முற்றத்தில் மரங்களுக்கு தண்ணி பாய்ச்சிறது இப்படி பலவேலைகளைச் செய்வார். அந்த வேளை கந்தசாமியும் தகப்பனாரோடு சேர்ந்து வருவான். நானும் கந்தசாமியும் பள்ளித் தோழர்களென்பதால், எனக்கு அவனைக் கண்டால் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கும். எங்களது வீடு அமைந்துள்ள நிலப்பரப்பு மிகவும் நீள அகலமானதாலும், மரங்கள் சூழ்ந்ததாலும், எனது தந்தையாருக்குத் தெரியாமல் அவனுடன் கண்ணுக்கெட்டாத இடத்துக்கு சென்று விடுவேன். அந்த வேளை எனது உறவினர்களின் பிள்ளைகளும் அங்கு கூடுவர். கிட்டி அடித்தல், கிளித்தட்டு மறித்தல், கெந்தியடித்தல், போளை அடித்தல் என பல்வேறு விளையாட்டுக்களில் சிறுவர் நாங்கள் ஈடுபடுவோம். எங்கள் வயதொத்த சிறுமிகளும் அங்குளம்முடன் சேர்ந்து விளையாடுவர். அந்த சிறுபராயத்தில் எம்மிடையே எந்தவித சாதி வேறுபாட்டு கலங்கங்களும் இதயத்தில் புகுந்து விளையாடவில்லை. அந்த பாகுபாடற்ற நிலையே இன்னும் எனது இதயத்தில் நிறைந்துள்ளதை எண்ணும் போது, என்போன்றவர்களின் அன்றைய இளவயதில் எம்மை வழிநடத்திச் சென்றவரும், எமது குருவாகவும், மானசீகமாக நாம் நேசித்த உன்னத மனிதராகவும் எமது அயலில் வசித்துவந்த காத்தியேசன் மாஸ்ரரை நான் நன்றி கூறுவதுண்டு.

வேலு தனது வேலைகளை முடித்து விட்டு, எமது வீட்டு வாசலில், தனது அழுக்குப் படிந்த துண்டால் வியர்வையை துடைத்தபடி அமர்ந்திருப்பார்.

எனது அம்மா ஒரு சோடாப்போத்தலுக்குள்ளை நிறைய தேனீரை ஊற்றி வந்து வேலுவிடம் கொடுப்பா. அதை மிக மரியாதையுடன் எழும்பி நின்று வாங்கி வேலு தாகந்தீர்க்கும் வேளை, கந்தசாமியும் விளையாடிய களைப்புடன் ஓடி வருவான். மகனுக்கு தான் குடித்த தேனீரில் அரைவாசியை பருகுவதற்கு வேலு கொடுப்பார். எனது தந்தையார் தான் நினைத்த கூலியைத்தான் வேலுவுக்கு கொடுப்பதுண்டு. வேலு எந்தவித ஆட்சேபனைகளுமின்றி அதை வாங்கிக் கொண்டு கந்தசாமியையும் கூட்டிக் கொண்டு போய்விடுவார். எனது மூத்த அக்காவான தனம் அக்காவுக்கு அப்பொழுது இருபத்துமூன்றுவயது இருக்கலாம். வேலு வாசலை விட்டு அகன்று சென்றதும், அவர் தேனீர் பருகிவிட்டு வைத்த சோடாப்போத்தலை அக்கா ஒரு கடதாசியால் மூடிப்பிடித்து எடுத்து, கோடியில் விறகு கொத்தி அடுக்கி வைத்திருக்கும் பரணில் வைத்துவிட்டு வருவது இன்னும் எனது ஞாபகத்தில் இருக்கிறது. அதுமாத்திரமல்ல, ''டேய் பாலன் மூதேவி போய் குளிச்சிட்டுவா. அந்த கந்தனோடை கட்டிப்புரண்டு விளையாடிவிட்டு உள்ளை குளிக்காமல் வந்து பார் காலை முறிச்சிடுவன், குளிக்கேலாட்டி கந்தன்ரை வீட்டுக்கே போய் அந்தச் சாதியளோடைபோய் கிட'' என ஆக்ரோஷமாக அக்கா என்னைப் பார்த்து கத்துவதற்குப் பயந்து, கிணத்தடிக்குப் போய் போட்ட உடுப்புக்களை களைத்து குளித்து விட்டு, அக்கா கொண்டுவந்து தந்தவேறை உடுப்பை மாற்றிவிட்டே வீட்டுக்குள் நுழைவேன் நான்.

எனது அண்ணன்மார் இந்துக்கல்லூரியில் படித்தபடியால் அவர்களுக்கு இருந்த மரியாதை பரமேஸ்வராக்கல்லூரியில் படிக்கும் எனக்குக் கிடைக்கவில்லை.

அக்கா அடிக்கடி அதைக் குத்திக்காட்டிக் கொண்டே இருப்பா!! ''உன்ரை கொண்ணன்மாரைப்பார் எல்லாச் சாதியளோடையும் சேர்ந்து விளையாடுறார்களே, நீ மாத்திரம் அவன் கந்தன், பூதன், நாகன் எண்டவங்களோடைத்தான் உன்ரை சகவாசங்களும் விளையாட்டும்'' தினமும் அக்காவிடம் இப்படியான வசைமாரியைக் கேட்டு எனக்கு அலுத்துப்போகும்.

எங்கள் வீட்டுக்கு தினந்தோறும் சின்னாச்சி என்ற நடுத்தரவயதுப் பெண் மரக்கறி கொண்டுவருவா. தின்னவேலிச் சந்தையில் பலவிதமான மரக்கறியளை வாங்கி அவற்றை ஒரு கடகப் பெட்டியில் போட்டு அங்கிருந்து கிட்டத்தட்ட மூன்றுமைல் தூரத்திலமைந்த எமது வீட்டுக்கு தலைச்சுமையாக கொண்டுவருவா. அயல்வீடுகளுக்கும் மரக்கறி வியாபாரம் சின்னாச்சிதான்.

எனது அம்மா தினமும் சின்னாச்சியிடம் வாங்கும் மரக்கறிகளுக்குரிய காசை கடனின்றி உடனுக்குடன் கொடுத்து விடுவா. அதனால் சின்னாச்சிக்கு அம்மாவிடம் அதிக மரியாதையும், பிரியமும் கூட. சின்னாச்சி சொல்லுகிற விலையை எந்தவித கேள்வியுமின்றி அம்மா கொடுத்து மரக்கறி வாங்குவதை நான் அவதானித்துள்ளேன். ''பாவம் சின்னாச்சி, தின்னவேலிச் சந்தையிலையிருந்து மூண்டுமைல் நடையிலை, வெய்யில், மழையெண்டும் பாராமல் எங்களுக்கு மரக்கறி கொண்டு வந்து தாறாள். குடிகாரப்புருஷன் ஊதாரியாக தெருவிலை திரிஞ்சா அவளென்ன செய்வாள் ஆறு பிள்ளையளோடை. அந்த அப்பாவியிட்டை ஐஞ்சுபத்தை நாங்கள் சுரண்டி சீவிக்க வேணுமே. உங்கை பலசனங்கள் அந்த அப்பாவியிட்டை கடன் வாங்கிப் போட்டு அப்பவா, இப்பவா எண்டு ஏமாத்துதுகள். மனச்சாட்சிகில்லாத சனங்கள் உதுகள்'' என சின்னாச்சிபற்றிய இரக்க சுபாவத்தினை அம்மா பலரிடம் கதைப்பதை நான் கேட்பதுண்டு.

அம்மா, இரண்டு வெள்ளாடுகள் வளர்த்துவந்தா. அந்த ஆடுகளுக்கு புல்லுக்கட்டுக்கள், குழைகள் என்பவற்றை கொண்டு வந்து கொடுப்பவளும் சின்னாச்சிதான். அதனால் சின்னாச்சியின்மேல் இனியில்லையெண்ட பற்று அம்மாவுக்கு. சின்னாச்சி மரக்கறி எல்லாம் விற்றுவிட்டு தனது வீட்டுக்கு திரும்புமுன் அம்மாவை சந்திக்காமல் செல்லமாட்டா.

சின்னாச்சியைக் கண்டதும் சுடச்சுட ஆட்டுப் பாலுக்குள்ளைகடுமையான சாயமும், சீனியும் போட்டு தேனீர் தயாரித்து வேலு தேனீர் குடிக்கும் போத்தலைக் கழுவி அதற்குள் நிறைத்து கொண்டு வந்து அவளுக்கு கொடுப்பா. அதைக் குடித்த சின்னாச்சியின் முகத்தில் ஒரு நன்றி உணர்ச்சி பிரவாகிக்கும். அம்மாபோடும் ஆட்டுப்பால் தேனீர் இன்னும் எனது உதடுகளில் ஒட்டி உள்ளத்தில் இனிப்பதாகவே நினைக்கிறேன். அந்தத் தேனீரின் ருசிக்கு எதுவும் ஈடாகாது, அப்படி ஒரு சுவை.

சின்னாச்சிக்கோ, வேலுவுக்கோ போத்தலில் தேனீர் கொடுப்பதில் அம்மாவுக்கு கொஞ்சமும் சம்மதமில்லை. ''அதுகளும் மனுசப்பிறவிகள்தானே, ஏன் அப்பிடிச் செய்யவேணும்'' என எனது தந்தையாரிடமும் மூத்த அக்காவிடமும் அம்மா விவாதிப்பதுண்டு.

''அப்ப நாங்கள் தேத்தண்ணி குடிக்கிற மூக்குப்; பேணிக்கையே குடுக்கச் சொல்லுறியள். எங்கடை ஆக்கள் கண்டால் எங்கடை வீட்டிலை கை நனைக்குங்களே. அம்மாவுக்கு கொஞ்சமும் அறிவில்லை. எல்லாரையும் நாங்கள் வைக்கிற இடத்திலை வைக்கவேணும். கொஞ்சம் உவங்களுக்கு இடங்குடுத்தால் தலையிலை ஏறிப்போடுவாங்கள். உங்கை பாக்கேல்லையே மாவிட்டபுரத்துக்கையும், நல்லூருக்கையும் தாங்கள் உள்ளே போகவேணுமாம், எங்கடை அம்மாவுக்கு உதெல்லாம் விளங்கினாத் தானே'' அக்காவின் பிரசங்கம் கேட்டு எனக்கும் ஆத்திரமாகத்தான் இருக்கும். சும்மா கதைச்சனெண்டால் அக்காவிட்டை உதைதான் கிடைக்குமெண்டு எனக்குத் தெரியும்! அம்மாவுக்கு எனது தந்தையாரினதும், மூத்த அக்காவினதும் பிடிவாதத்தால் தனக்கு பிடிக்காத ''போத்தல் தேனீர்'' காரியத்தை செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

எனது அம்மா இறந்தபின் எனது உறவினர்களைவிட, என் அயல் கிராமத்தைச் சேர்ந்த வேலு, சின்னாச்சி போன்றோரின் குடும்பங்களே வீட்டு முற்றத்தில் கூடி இருந்து அலறி ஓலமிட்டதை எண்ணும்போது இப்பொழுதும் எனது கண்களிலிருந்து மழை கொட்டும்.

அந்த வேற்றுமை பாராட்டாத தாயின் வயிற்றிற் பிறந்த நான், இன்றுவரை அந்தத் தெய்வத்தின் கொள்கைகளைப் பின்பற்றி வருவதையிட்டு ஆறுதல் கொள்வதுண்டு.

ஆனால் அக்கா, எனது மூத்த அக்கா ஆமாம் அன்று நான் பார்த்த மூத்த அக்கா. தினமும் வசைபாடித் திட்டித்தீர்த்த, ஒதுக்கித் தள்ளிய அதே சாதியைச் சேர்ந்த கந்தனென அக்காவால் அன்று அழைக்கப்பட்ட கந்தசாமியை நடுவீட்டிலை குசன் இருக்கையில் இருக்கவைத்து வெள்ளிரம்ளரில் தேனீர் கொடுத்ததை எண்ணும்போது எனக்கு சிரிப்பாக வந்ததுடன், இதுவெல்லாம் உண்மையான காட்சிகளா என யோசிக்கவும் வைத்தது. அந்த ''கந்தன் என்ற கந்தசாமியின் மகள் குசினிக்குள் நின்று அக்காவுக்காக தான் சமைத்த உணவுகளை ஒரு வெள்ளித்தட்டில் போட்டு வைத்துவிட்டு,'' அம்மா, எழும்புங்கோ, மணி மத்தியானம் இரண்டாச்சு, பசியோடை கிடக்கிறியள். தம்பி வந்திட்டார் தானே இனி உசாரா சாப்பிடுங்கோ'' எனச்சொல்லியபடி கையில் தண்ணிச்செம்புடன் வந்து அக்காவின் அருகே நின்றாள்.

அக்கா எழும்பி இருக்கமுடியாமல் தட்டுத்தடுமாற, கார்த்திகா என்ற கந்தசாமியின் இளையவள் அக்காவின் கைகளை மெல்லப்பிடித்துத் தூக்கிவிட்டாள்.

கையில் இருந்த தடியை ஊன்றியபடி அக்கா வெளியே சென்று முகத்தை சற்றுக்கழுவி, கைகளையும் கழுவிக்கொண்டு ஈசிச்சியரில் வந்தமர்ந்தா.

கார்த்திகா கையில் ஒரு துவாயை எடுத்து அக்காவின் முகத்தை மெல்லமாக துடைத்துவிட்டாள். அந்தவேளை அக்காவின் முகத்தில் ஒரு சிறிய கவலைக்கீற்று தோன்றியது போலிருந்தது. தன் மகள் செய்யவேண்டிய வேலையை வேறொரு கை செய்கிறது என்ற கவலையாக இருக்கலாம். கார்த்திகா அக்காவுக்கு சாப்பாட்டைக் கொண்டுவந்து அவவின் கையிலே கொடுத்து சாப்பிடச்சொன்னாள்.

''தம்பி நீயும் வாவன் சாப்பிட'' அக்கா என்னையும் அழைத்தா. நான் குளித்துவிட்டு வருவதாகக்கூறி கிணற்றடிக்குப் புறப்பட்டேன்.

''தம்பி பாத்றூமிலை போய்குளி, மூண்டு வருஷத்துக்கு முதல், மகன் தன்ரை மனிசி பிள்ளையள் இங்கை வர்ரேண்டதுக்காக பாத்றூம், கொமெட்கக்கூசும் கட்டச்சொல்லி காசனுப்பினவன். என்ரை அறைக்குப் பக்கத்திலேயே கட்டச்சொன்னவன். பிள்ளையள் நிலத்திலை இறங்கமாட்டுதுகளாம் பாத்றூம் போக. அவன்ரை மனிசி கொமட் இல்லாட்டி இஞ்சை வரமாட்டேண்டு சொல்லிட்டாளாம். அதுக்காக மூண்டுலச்சம் செலவழிச்சு புதிசா அதுகளை கட்டினனான். அதுக்குள்ளை போய் குளிச்சிட்டு கெதியிலை வா சாப்பிட'' என அக்கா சொன்னததால் பாத்றூமுக்குப்போய் நுழைந்து குளிக்கத் தொடங்கினேன். மாபிள்போட்ட பாத்றூமும் கொமட் கக்கூசும் மிகவும் சுத்தமாக இருந்தது பெரும் ஆறுதலைத் தந்தது. குளித்துவிட்டு வெளியே வந்தேன்.

வந்த எனக்கு கார்த்திகா மதிய உணவை பரிமாறினாள். கந்தசாமியையும் அழைத்தேன். அவன் தான் வீட்டுக்குப்போய் சாப்பிடுவதாகச் சொல்லியும் நான் விடவில்லை. கார்த்திகாவிடம் ஒரு வெள்ளித்தட்டை கொண்டுவரச்சொல்லி அதற்குள் நானே சோறுகறி போட்டுவிட்டு பக்கத்தில் வரச்சொல்லி இருத்தி சாப்பிட வைத்து நானும் சாப்பிட்டேன்.

''தம்பி பாலா அந்தச் சின்னக்கால நினைவுகளை நினைச்சா இப்பவும் மனதுக்குள்ளை ஏதோ செய்யுது. அண்டைக்கு இருந்த பாலாவின்ரை குணத்திலை கொஞ்சமும் மாறாமல் இண்டைக்கும் இருக்கிறதைப்பாத்த எனக்கு வலுத்த சந்தோஷமாயிருக்கு'' என தனது கண்களை இடதுகையால் துடைத்தபடி சாப்பிடத் தொடங்கினான் கந்தசாமி. அவன் சொன்னதை அக்காவும் அவதானமாகக் கேட்டாலும் அதைப்பற்றி எதுவும் அவ கதைக்கவில்லை. ஒரு குற்றஉணர்வு அக்காவின் மனசிலை தோன்றி மறைந்திருக்கலாம்.

அக்காவின் கணவர் ஆம் எங்களது அத்தான் காலமாகி ஆறேழு வருஷமாகிறது. அதிலிருந்து அக்கா தனது மனக்கவலைகளைத் தாங்கியபடி தனியாகவே வாழ்ந்து வந்தா.

அக்காவின் பிள்ளைகள் இருவரும் வெளிநாடு போய் குடும்பம் குடித்தனமாய் வாழத்தொடங்கி பதினைஞ்சு வருஷத்துக்கு மேலிருக்கும். மகன் ரவி லண்டனிலை வசிக்கிறான். அவனுக்கு இரண்டு பெண்பிள்ளைகளும் ஒரு ஆணும். லண்டனிலியே அவர்கள் படித்தும் வருகின்றனர்.

மகள் இந்திரா கனடாவிலை கணவர் பிள்ளைகளுடன் வசிக்கிறாள். இந்திராவுக்கும் இரண்டு பெண்பிள்ளைகளும் இரண்டு ஆண் பிள்ளைகளுமுண்டு.

அவ்வப்போது மகன் ரவியும், மகள் இந்திராவும் அம்மாவுடன் ரெலிபோனில் கதைப்பதுண்டு. பேரப்பிள்ளைகளும் கொச்சைத்தமிழில் கதைப்பர். தனது பேரப்பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது இங்கிலீசு மாத்திரமே தெரியுமெண்டு வருகிற போகிற ஆக்களுக்கு கூறுவதில் அபாரபெருமை அக்காவுக்கு. இடியப்பம், புட்டு, தோசை, இட்டலி எண்டால் அதுகளுக்கு பிடிக்காதாம். என்ன தமில் சாப்பாடெண்டு பகிடியும் பண்ணுங்களாம். பிசாவோ, கிசாவோ தானாம் அதுகளுக்கு வேணுமாம் என்று சொல்வதிலும் தனது பேரப்பிள்ளைகளைப் பற்றி புகழுவதில் அக்காவுக்கு அலாதிப்பிரியம்.

போர் முடிந்த கையோடு மகன் தனது பிள்ளைகளையும் மனிசியையும் இலங்கைக்கு கூட்டி வந்தான். அப்போ நல்லூர் கொடியேறியிருந்ததால் பிள்ளையளுக்கு அதையெல்லாம் காட்டவேணும் என்ற ஆசையில் கூட்டி வந்தான். அக்காவுக்கு பலகாலமாக மகனையும், பேரப்பிள்ளைகளையும் கண்ட புழுகத்தில் வருகிறபோகிற தெரிந்தவர்களுடன் கூட சரியாக கதைக்காமல் பெருமை பாராட்டி நடந்து கொண்டார். உறவினர்கள் வந்தால் உபசரிக்கும் அக்கா, அவர்களையும் புறக்கணித்து நடந்து கொண்டதால், மகனது குடும்பம் மீண்டும் வெளிநாடு சென்றதும் அக்காவை யாரும்; எட்டிப்பார்க்காமல் கைவிட்டு விட்டனர்.

மகள் இந்திரா அடுத்த நல்லூர் திருவிழாவுக்கு குடும்பத்துடன் வந்து தாயை பார்ப்பதாக அறிவித்திருந்தாள்.

தந்தையாரின் இறுதிச் சடங்குகூட பிள்ளைகள் இருவரும் இல்லாமலேயே நடந்தேறியது. பிள்ளைகள் அதற்கான பணத்தை அனுப்பி வைத்ததோடு, இறுதிக்கிரியையை வீடியோ பிடித்து அனுப்பும்படி கேட்டதுடன், அந்திரட்டிக்கு ''கல்வெட்டு'' கவர்ச்சியாக அடித்து, ஊரை அழைத்துச்சாப்பாடுபோடவும் தாராளமாக காசு அனுப்பியிருந்தனர். இதைச் சாட்டாக வைத்து அக்காவிடம் அதற்கு இதற்கெண்டு பணம் பிடிங்கி, எங்களது ஒண்டவிட்ட மருமகன் முறையான வரதன் இலட்சக்கணக்கில் சுருட்டி அக்காவை ஏமாத்தியதாக பின்பு நான் அறிந்து கொண்டேன்.

போர் சூழல், போக்குவரத்துக் கெடிபிடிகளால், அத்தானின் இறுதிச் சடங்கில் திருகோணமலையில் வேலை நிமித்தம் நிரந்தரமாக குடும்பத்துடன் குடியேறி வசித்த என்னாலும் கலந்து கொள்ள முடியவில்லை. எனது ஆண்சகோதரங்களும் எல்லாரும் வெளிநாட்டிலை பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் வசித்ததால் அவர்களாலும் அவ்வேளை வந்து பங்குபற்ற முடியவில்லை.

அக்காவுக்கு அவ நோய்வாய்ப்பட்டு பாயில் விழுந்தவேளை உதவி செய்ய உறவினர் எவரும் முன் வரவில்லை. அப்படி ஆரும் உதவிசெய்ய வந்தாலும் அக்காவிடம் ஐநுஜூறு ஆயிரமெண்டு பறிக்கும் நோக்குடனேயே வந்து சேருவர். அது அக்காவுக்குப் பிடிப்பதில்லை.

அக்கா வீட்டுக்கு கந்தசாமி அடிக்கடி வருவான். எமது குடும்பத்தினருடன் அவனது தகப்பனாரான வேலு முதற்கொண்டு பழகிய அந்த நாட்களிலிருந்து கந்தசாமிக்கு எங்கள் அனைவருடனும் ஒரு நட்பு இழையோடியிருந்தது. அந்த வகையில் தனியே நோய்வாய்ப்பட்டிருக்கும் எனது அக்காவை அவ்வப்போது பார்க்க வருவதுடன், அக்காவுக்கு, கடைக்குப் போய் சாமான்கள் வாங்கி வருதல், அக்காவை டொக்டரிட்டை கூட்டிக்கொண்டு போதல், பால் வாங்கிக் கொடுத்தல், அன்றாட உணவுகளை கடையில் வாங்கிக் கொடுத்தல் போன்ற வேலைகளைச் செய்து உதவிவந்தான்.

எத்தனை நாட்களுக்கு கடைச்சாப்பாடு சாப்பிட முடியும். அக்காவுக்கு சிலவேளைகளில் கடைச்சாப்பாடுகள் ஒத்துக்கொள்ளாமல் வயிற்றோட்டமும் ஏற்பட்டுவிடும். அந்தவேளை கந்தசாமி இளைய மகளான கார்த்திகாவை அக்காவுக்கு உதவுவதற்கு இடைக்கிடை அனுப்புவான்.

அக்காவுக்கு நோய்வரவர அதிகரிக்க சாதாரண தேனீரைதயாரிக்ககூட இயலாததன்மை ஏற்பட்டுவிட்டது. அக்கா இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தது போல ''கந்தசாமி உன்ரை மகள் கார்த்திகாவை நான் என்ரை பிள்ளையைப் போல பாப்பன், அவளை இங்கை கொண்டுவந்து விடன். எனக்கு உந்தக் கடைச்சாப்பாடு ஒத்துவருதில்லை. அவளும் நல்லா சமைப்பாள் எண்டு கேள்விப்பட்டன். மாதம் பத்தாயிரம் அவளுக்குக் கொடுக்கிறன். நீ என்ன சொல்லுறா'' என கந்தசாமியைப் பார்த்து பரிவுடன் அக்கா கதைத்தா.

கந்தசாமிக்கு தூக்கி வாரிப்போட்டது. ''அன்றைய தனம் அக்காவா இப்படியெல்லாம் கதைக்கிறா? தனது தகப்பனுக்கும், தனக்கும் போத்தலில் தேனீர் தந்து வெளியே இருக்க வைக்கவேணுமெண்டு, தனது தாயாருடன் வாதிட்டு சண்டைசெய்த தனம் அக்காவா இப்படி கதைக்கிறா'' என யோசிக்க கந்தசாமிக்கு சிரிப்பாக வந்தது. ஆனாலும் அதையெல்லாம் வெளிக்காட்டாமல், அக்காவுக்குத் துணையாக அடுத்த நாளே இளையமகள் கார்த்திகாவை கந்தசாமி அக்காவீட்டுக்கு அழைத்து வந்தான்.

கந்தசாமியின் செயலைப் பார்த்த அக்காவுக்கு கண்கலங்கிவிட்டது. கந்தசாமி, முந்தி ஒரு காலத்திலை உங்களை நாங்களெல்லாம் ஒதுக்கி வைச்சனாங்கள். நீங்கள் தேத்தண்ணி குடிக்க போத்தலையும், சிரட்டையையும் நீட்டினனாங்கள். நாங்களெல்லாம் வானத்திலை இருந்து குதிச்சு வந்த தேவசாதியெண்டும், நீங்களெல்லாம் நரகத்து முள்ளுகளென்றும் எண்ணி

தொடர்ச்சி அடுத்தவாரம்....

## நீதி அமைச்சர் சொல்வதைப் போல

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றமும் செல்வோம்

## யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் அறிவிப்பு

- எஸ்.நிதர்ஷன்-

ஏற்கனவே இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைநீக்கிவிட்டுபுதிதாகக் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாதத்தடைச்சட்டத்தினை எதிர்த்து நீதிமன்றம் செல்வோம் என்று

தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ். மாவட்டம், சங்கானையில் இடம் பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலேநீண்டகாலமாக இருந்து வந்த பயங்கரவாத தடைச் சட்டத்திற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்றொரு புதிய சட்டமொன்றைக் கொண்டு வரப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமெனக் கோரியே நாடு முழுவதும் நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். அந்தப் போராட்டத்தாற்கு ஒருவர்கூட எதிர்ப்புத் தெரிவிக்காமல் அனைவரும் ஆதரவையே வழங்கி இருந்தனர்.

இவ்வாறான நிலைமையில்தான் அந்தச்சட்டத்திற்குப் பதிலாகதற்போதுபயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்என்றபெயரில் புதிய சட்டத்தை இந்த மாதம் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப் போவதாகக் கூறியுள்ள பிரதமர் அதனை எதிர்ப்பவர்கள் நீதிமன்றம் செல்லலாம் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது நாட்டிலுள்ள அனைவரையும் பாதித்திருந்தது. அதிலும்விசேடமாகத் தமிழ்மக்களையேபல்வேறு வழிகளில் மிக மோசமாகப் பாதித்தது. இந்த நிலையில் தற்போது கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டம் என்பது மேலும் மேலும் மோசமானது என்பதுடன் மக்களிற்கு மிகவும் ஆபத்தானதாகவே இருக்கிறது.

பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறசட்டத்தை நீக்கச் சொல்லி நாங்கள் கேட்கிற பொழுது அதனையும்விட மிகமோசமானதொரு சட்டத்தைகொண்டுவருவதை நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கிறோம்.

அத்தோடு அந்தச் சட்டத்திற்குப்எதிராகமக்களை அணிதிரட்டி தொடர்ச்சியாக பெரும்போராட்டங்களையும் முன்னெடுப்போம். அத்தோடு நீதிஅமைச்சர்சொல்வதுபோல இந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றமும் செல்லுவோம்.

மேலும்இன்றைய ஆட்சி என்பது கையேந்துகிற ஆட்சி அல்லது பிச்சை எடுக்கிற ஆட்சியாகத்தான் இருக்கிறது. இந்த ஆட்சியினால் பல்வேறு வழிகளிலும் நாட்டு மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டே வருகின்றனர்.

இந்த நாட்டிலே வாழ்கின்ற அனைத்து இன மத மக்களும் சமமாக மதிக்கப் படவேண்டும். அவ்வாறு அனைவருக்கும் சமமான உரிமை கொடுக்கப்படுகிற போது தான் நாட்டில் சுபீட்சம் ஏற்படும். பொருளாதாரப்பிரச்சினைகள் நாட்டில் இருக்கிற பொழுது சில நாடுகள் உதவி வழங்குவதற்கு முன் வந்திருக்கின்றன. ஆனால் நாட்டு



மக்கள் மீது தொடர்ந்தும் பல்வேறு அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகிறபொழுது இதனையும் பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறீர்களா என உதவி வழங்கும் வெளிநாடுகளிடம்கேட்கிறேன்.

இந்தநாட்டில்நாங்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்பதனையே இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் வெளி நாடுகளுக்கும் நாம் சொல்கிறோம்.

இதேவேளை நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டுமென்றும் அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும்ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் அதற்கு உருப்படியான எந்த நடவடிக்கையையும் அவர் எடுப்பதாக தெரியவில்லை.

அத்தோடு தற்பொழுது பொருளாதார பிரச்சனை இருப்பதாகவும் அதற்கு பின்னர்தான்இனப்பிரச்சனை தீர்வைகாணப்போவதாகவும் ஜனாதிபதி கூறுவதை ஏற்க முடியாது. ஆகையினால் தீர்வைஏற்படுத்தப்போவதாக வாய் கிழிய சொல்வது மட்டும் போதாது. உரிய நடவடிக்கையைமேற்கொள்ள வேண்டும் என்பதையும் நாங்கள்கூறிக்கொள்கிறோம் - என்றார்.

# யாழ் கல்விக் கண்காட்சி 2023 எனும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கண்காட்சி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் தொடங்கியது.

யாழ்ப்பாணத்தில்உள்ள தனியார் விடுதியில் காலை 9.30 மணியளவில் ஆரம்பமான கல்விக் கண்காட்சி 1ஆம் 2ஆம் திகதிகளில் தொடர்சியாக இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின்செயலாளர்உமாமகேஸ்வரன், வடக்குமான கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், யாழ் இந்தியத் துணைத்தூதரக தூதரகபதில் தூதுவர் ராம் மகேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இவ் கல்விக் கண்காட் சியில் பல சர்வதேச கல்வி நிறுவனங்கள்உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உயர்கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக தமது ஆலோசனைகளைமாணவர்களுக்கு வழங்கி வருகின்றன.

பாடசாலைமாணவர்கள் பலர் இக் கண்காட்சியினை ஆர்வத்துடன் பார்வையிடுவதனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.








# தொல்பொருள் திணைக்களம் பௌத்தத்துக்கானது மட்டுமே

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

- எஸ்.நிதர்ஷன்-

நாட்டிலுள்ள தொல் பொருள்திணைக்களம்என்பது தொல்லியலுக்கானது அல்ல. உண்மையில் அது பௌத்த திணைக்களம். தொல்பொருள் அடையாளங்கள் என்பது வெறுமனே பௌத்த மதத்திற்குரியது என்று எவரும் உரிமைகொண்டாட முடியாது என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை முன்னெடுப்பது மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையே விரிசல்களை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் மக்கள் மத்தியில் இனக்கலவரங்களையே ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடகிழக்கில் பௌத்த மயமாக்கல்செயற்பாடுகளை கண்டித்தும் அதனைத் தடுத்து நிறுத்தக் கோரியும் நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அங்கு அவர்மேலும்தெரிவித்ததாவது:

பௌத்த சிங்கள பேரினவாதம் இந்த நாட்டிலே இன்றைக்கு தலைவிரித்தாடுகிறது. பேரினவாத ஆட்சி எப்படியாக இருக்க வேண்டும் என்பதற்குக்கூட இன்றைக்குநடக்கிறஆட்சியை வரைவிலக்கணமாக எடுத்துக்கொள்ளலாம். நீண்டகாலமாக தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் இருப்பையே இல்லாதொழிக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தன.

இந்த நாட்டிலே தமிழ் மக்கள் சிறுபான்மையாக இருக்கிற காரணத்தாலும் எணிக்கையிலே தாம் அதிகம் என்பதாலுப் இந்த நாடு தங்களுடையது என்ற அடிப்படையிலும் தாம் நினைத்ததை செய்யலாம் என்றவாறாகவும் தமிழ் மக்கள் விரும்பினால் இங்கு வாழலாம் என்பதாகவே ஆட்சியாளர்களின் எண்ணங்கள் செயற்பாடுகள் அமைகின்றன.

அதன் வெளிப்பாடாகவே கடந்த பல வருடங்களாக அடக்குமுறைகள் ஆக்கிரமிப்புக்கள் அபகரிப்புக்கள் என்பன தமிழ்மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலைமையில் அண்மைக் காலமாக தமிழ் மக்களின் வரலாற்று அடையாளங்களை அழிக்கின்ற செயற்பாடுகள் வட கிழக்கு முழுவதும் திட்டமிட்ட வகையில் முழுவீச்சாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக குருந்தூர் மலை வெடுக்குநாறிமலை கிண்ணியா உள்ளிட்ட ஆலயங்களின் வரலாறுகளை அழிக்கின்ற அல்லது பௌத்த மயமாக்குகிற செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

இவற்றுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகளும் உள்ளன. ஆனால் நீதிமன்ற உத்தரவுகளையும் மீறியே அவர்களது செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதிலும் தொல்பொருள் திணைக்களம் என்றொரு திணைக்களத்தின் ஊடாக தொல்லியல்அடையாளங்கள் எனக் கூறி தமிழர்களின் வரலாற்றுஅடையாளங்களை ஆக்கிரமித்தும் அழித்தும் இருப்பதையே கேள்விக் குறியாக்குகின்ற செயற்பாடுகள்தான் தற்போது தொடர் கதையாக இருக்கிறது.

தொல்லியல் அடையாளங்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இவை எல்லாம் பௌத்த மதத்திற்குச்சொந்தமானவை என உரிமை கொண்டாட முடியாது.

தொல்பொருள் திணைக் களங்கள் என்பது தொல்லியலுக்கானது அல்ல. உண்மையில் அது ஒரு பௌத்த திணைக்களம்.

அந்தத்திணைக்களத்தின் இலட்சினையேபௌத்தத்தை குறிக்கின்றது.

அதன் செயற்பாடுகளும் பௌத்தமயமாக்கும்செயற்பாடுகளாகவே இருக்கிறது. ஆகையினால் அந்தத் திணைக்களம்முழுக்கமுழுக்க பௌத்த திணைக்களம்தான்.

இந்த நாட்டில் பல்வேறு சமூகங்கள் வாழ்கின்றன. நாட்டில்குறித்தஒருசமூகத்தை மட்டும் குறிப்பதான ஒரு சின்னத்தை எப்படி ஒரு திணைக்களத்தின் இலட்சனையாக்க முடியும

குறிப்பாக இத் திணைக் களமும் இராணுவமும் சேர்ந்துதான் மற்றைய இனங்களின் அடையாளங்களை அழித்தும் பௌத்த மயமாக்குகின்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

இப்படியாக இந்த நாட்டில் மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையில் விரிசல்கள் பிளவுகளை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் கலவரத்தை ஏற்படுத்த நினைக்கின்றனர்.

ஆனாலும் சிங்கள மக்களுக்கோ அல்லது அவர்களது பௌத்த மதத்திற்கோ நாங்கள்எதிரானவர்கள் அல்ல. எனினும பேரினவாதத்திற்கு எதிரானவர்கள்.

அத்தகைய பேரினவாத செயற்பாடுகளுக்கு நாங்கள் இடமளிக்க முடியாது. அதனை அனுமதிக்கவும் முடியாது என்பதுடன் அதனை எதிர்த்து நாங்கள் போராடுவோம் - என்றார்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 02th of April 2023

We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

## *Read the following passage and Answer: the question that follows.*



Fuel is a material that is burned in order to get heat and light and also to generate power.




The Process of burning is a chemical reaction. A material combines with oxygen from the air and gives off energy. The energy is given off in the form of heat and light. Fuels Deepak En can also be classified as solid, liquid and gaseous. Wood was one of the first fuels used by man. It was the easiest to get the cheapest.

After wood started becoming scarce it was replaced by coal. Coal contains a high percentage of carbon. Carbon is the most important ingredient in most fuels. Fuels with a high percentage of carbon burn evenly and with a hot flame. The most important liquid fuels come from petroleum. However petroleum reserves are becoming exhausted with the passage of time.

Questions

1. What is the source of energy?
2. What is produced with the burning of the fuel?
3. Why was wood replaced by coal?
4. Which factor decides the quality of fuel?
5. Give a suitable title to the passage.
6. Find the opposite words for the following words/phrases from the passage
   (a) Common
   (b) Equally



Once there were only a few million people living on Earth and it took a thousand years for that number to double. There are now 3,800 million Earth dwellers and the number doubles about every thirty-five years. Men have cleared away forests to make fields for growing crops. They have moved mountains to make room for roads and cities. They have built huge dams across rivers to turn valleys into lakes and they have built dykes to push back the sea and create more dry land to live on.

Once everyone cheered at the progress that man made in changing his environment like this, but now many people are worried by the problems that such changes can bring. When the Aswan Dam was built across the River Nile in Egypt, it was meant to help the farmers by giving them water when they needed it. Unfortunately, people did not realise that much of the nourishing food for plants in the river would be trapped by the dam so the farmers' crops would suffer.

Also, hundreds of kilometres away at the mouth of the River Nile, less fresh water pours into the Mediterranean Sea. This means that the sea will become more salty and fewer fish will be able to live in it. When this happens, people who catch fish for their living will suffer. Problems like this are caused when men look at only one part of nature and do not realise that all nature is bound up together. If one part is changed, other parts may suffer.

Questions

1. How many years did it take for the number of people to double?
2. What were the changes made in nature?
3. What did the men not realise when a dam was built across the River Nile?
4. (a) Write 2 pairs of homophones.
   (b) Write 2 sets of collocation.
5. What are the earth's resources used by you?



We left Dehradun early in the morning and stopped by for breakfast at Missouri. From Missouri the picturesque road heads north to Yamuna bridge, then to Barkot (where one road branches to Gangotri). The road winds along the Yamuna river. through luxurious dense green vegetation to Hanumanchatti, the end of motorable road. The remaining journey has to be undertaken on foot or pony. Yamunotri is only 13 km. from Hanuman Chatti.

But it is better to proceed another 6 km.



and have the night halt at Janakibaichatti. The journey to Yamunotri is simply breathtaking.



High snow-covered peaks all around, glaciers, streams and waterfalls, vibrant green foliage, and the pristine air are a sheer delight to tired city lungs. Yamunotri, 3322 metres above sea level, is located on the western bank of the great peak of Banderpunch (meaning – monkey's tail) which is 6315 metres high.

Questions

1. Where did the travellers stop for breakfast?
2. Why is a part of the journey to Yamunotri to be undertaken on foot?
3. What has made the journey to Yamunotri breathtaking?
4. (a) Vibrant green foliage.

(Choose the appropriate meaning for the underlined word)
(i) Vibrating
(ii) full of life and energy
(iii) shivering
(iv) trembling.

(b) Give another word for
(i) Snow-Covered
(ii) Foliage.

5. Do you think a journey of this kind is dangerous as well as pleasant? Why?
6. Find the suitable word meaning for the words given below from the passage
   (a) take one's breath away
   (b) clean and fresh

Answer:

1. The travellers stopped for breakfast at Mussouri.
2. Part of the journey to Yamunotri is to be undertaken on foot because only a part of that road is motorable.
3. The journey to Yamunotri is breathtaking because all around there are high snow covered peaks, glaciers, streams, waterfalls and vibrant green foliage. The air is pristine and therefore fresh and delightful.
4. (a) (ii) full of life and energy.
   (b) (i) Snow-Clad (ii) Green Leaves.
5. No, I do not think this journey is dangerous but it is certainly pleasant and delightful. It is not dangerous nowadays because the pony owners take reasonable care and the ponies are trained to carefully carry the passengers. It is totally delightful because of the breathtaking scenery and the clean, pure air.
6. (a) breathtaking
   (b) pristine



One warm afternoon, Mrs. Siva wanted to make some cold drinks for her family. She asked her son, Kumar, to go to the nearby shop to buy a big packet of ice.

On his way back from the shop, Kumar spotted a newly-built playground in his neighborhood. He saw many children playing on the slides, swings and merry-go-round. They were having a wonderful time. Kumar told himself that he would stay for only a short while. He put the plastic bag full of ice on a bench and joined the other children. However, he began to enjoy himself so much that he soon forgot about everything else.





When Kumar finally decided that he was ready to go home, he was surprised to find that the bag of ice was no longer on the bench. Instead, there was a bag of water. "Someone has stolen my ice!" Kumar exclaimed. "He took my ice and left some water in the plastic bag!"

Questions

1. What did Mrs. Siva ask Kumar to buy?
2. When did Kumar see the playground?
3. Why was Kumar at the playground for a long time?
4. What happened to the bag of ice?
5. Which word in the passage has the same meaning as 'noticed?

**"konwledge isn't free. You have to pay attention"**

# “ஓடிச பிள்ளைகளுடன் விளையாட்டுக்கள் மூலம் அதிக நேரம் செலவழிப்போம்”

## ஓடிச விழிப்புணர்வு தினம் ஏப்ரல் 2

வருடம் தோறும் ‘ஓடிசம்‘ நிலை தொடர்பான விழிப்புணர்வு தினமாக ஏப்ரல் 2ஆம் திகதி பிரகடன படுத்தப்பட்டுள்ளது. ஓடிசம் நிலையானது மனித மூளையின் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளில் ஏற்படும் அசாதாரணம் காரணமாக ஏற்படுகிறது. ஆகவே ஓடிச நிலையால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு மூளையின் விருத்தி பாதிக்கப்படுகிறது.

ஓடிச குழந்தைகள் சமூகத்துடன் சேர்ந்து இயங்குதல் மற்றும் தொடர்பாடலில் சிரமத்தை எதிர் கொள்வர். ஆகவே இவ் வகையான பிள்ளைகளிற்கு விளையாட்டுச் செயற்பாடுகள் அவர்களிற்கும் சூழலுக்குமான பிணைப்பை அதிகரிக்கிறது. அதாவது விளையாட்டுகளின் மூலம் குழந்தையின் பெரும் இயக்க செயற்பாடு, நுண் இயக்க செயற்பாடு, சமூக திறன், தொடர் பாடல் திறன், மொழி பேச்சாற்றல், நினைவாற்றல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் கட்டியெழுப்பப்படுகிறது.

விளையாட்டுகள் தொடங்க முதல் பிள்ளையுடன் நாம் சுமுகமான, சௌகரியமான உறவு முறையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதற்கு நாம் என்ன செய்யலாம் என்பதை யோசிப்போம். அதாவது பிள்ளையின் பெயர் கொண்டு கூப்பிடுவதன் மூலம் நாம் அவரைத் தெரிந்தவராயிருக்கிறோம் என்பதை அப் பிள்ளைக்கு உணர வைக்கவேண்டும். அத்துடன் இலகுவான மொழி நடையில் தெளிவாக ஆறுதலாக கண் தொடர்பு வைத்து படங்கள்/சைகைகளை வைத்து தொடர்பாடலை தொடங்கலாம். அந்த பிள்ளை எமது உரையாடலை விளங்கி அதற்கு மறுமொழியை சொல்ல தேவையான நேரத்தை வழங்கவேண்டும்.

இவ்வாறு பிள்ளையுடன் ஆயத்தமாகிவிட்டால் என்னென்ன விளையாட்டுகளில் ஈடுபடலாம் என்பதை நோக்குவோம். எமது கலாசாரத்திற்கேற்றதான பாரம்பரிய விளையாட்டுகளை முதன்மைபடுத்துதல் பிள்ளைக்கும் பெற்றோரிற்கும் வினைத்திறன் உள்ளதாய் அமையும். அதாவது எட்டு பெட்டி, சங்கீத கதிரை, யானை நடை, முயல் பாய்தல், யானை ஊர்வலம் போன்றன. அத்துடன் மொழித் திறனை விருத்தி செய்வதற்காகக் கதைகூறல், சிறுவர் பாடல் மற்றும் சிறுவர் நாடகம் போன்றவற்றை மேற்கொள்ளலாம். இயக்கச் செயற்பாடுகளில் கூடுதலாக முன்னேற்றம் தேவைப்படும் பிள்ளைகளிற்கு உயரம் பாய்தல், நீளம் பாய்தல், பந்தெறிதல், ஓட்டம், ஓடிப்பிடித்தல் மற்றும் வழி காட்டலுடன் கூடிய உடற்பயிற்சி போன்றவற்றை நெறிப்படுத்தலாம். இவ்வகையான விளையாட்டுகளின் மூலம் குழந்தையுடன் நேரம் செலவழித்த பின்னர் வரிசையாக நின்று கைகளைக் கழுவி சுய சுத்தம் பேணுவதற்கும் அமைதியாக ஆசனத்தில் அமர்ந்து தமது சகபாடிகளுடன் வார்த்தைகளாலோ உடல் மொழி சைகைகளாலோ இவ்வளவு நேரமும் தாம் விளையாடிய விளையாட்டுகள் பற்றிய நினைவுகளை மீட்டு பார்க்கலாம்.




# புதிய பயங்கரவாதச் சட்டம் வந்தால் மனித உரிமை மறீல்கள் அதிகரிக்கும்

## சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

icj International Commission of Jurists

அரசாங்கத்தினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தற்போதுள்ள வடிவத்திலேயே நிறைவேற்றப்பட்டால், அது மனித உரிமை மீறல்கள் மேலும் அதிகரிப்பதற்கும், அச்சட்டம் தவறான முறையில் பிரயோகிக்கப்படுவதற்கும் வழிவகுக்கும் என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக பிறிதொரு சட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் கடந்த 22ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டது.

இருப்பினும், அதன் உள்ளடக்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் மோசமாக காணப்படுவதாக பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டி வரும் நிலையில், இது குறித்து தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது பற்றி அந்த ஆணைக்குழு மேலும் கூறியிருப்பதாவது:

அரசாங்கத்தினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தற்போதுள்ள வடிவத்திலேயே நிறைவேற்றப்பட்டால், அது மனித உரிமை மீறல்கள் மேலும் அதிகரிப்பதற்கும், அச்சட்டம் தவறான முறையில் பிரயோகிக்கப்படுவதற்கும் வழிவகுக்கும் என்று நாம் கரிசனை கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக, இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அதன் 4(1)(ஏ) சரத்தின் பிரகாரம், ‘கொலைக்குற்றத்துக்கு’ தண்டனையாக மரண தண்டனை அறிமுகப்படுத்தப்படும்.

இலங்கையை பொறுத்தமட்டில் கடந்த 1976ஆம் ஆண்டிலிருந்து மரண தண்டனையை நிறைவேற்றுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. எது எவ்வாறெனினும், வாழ்வதற்கான உரிமைக்கு எதிரானதும், மனிதாபிமானமற்ற மிக மோசமான தண்டனையான மரண தண்டனையை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

‘பயங்கரவாத செயற்பாடுகளுடன்‘ எவ்வகையிலும் தொடர்புபடாத போதிலும், ஏதேனுமொரு விதத்தில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது எனும் விடயத்தை மரண தண்டனையை நியாயப்படுத்துவதற்காக பயன்படுத்தக் கூடாது.

புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இச்சட்டமூலத்தில் சில முன்னேற்றகரமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பினும் கூட, இதில் உள்ள ஏனைய கரிசனைக்குரிய விடயங்கள் நேர்மறையான விடயங்களை வலுவிழக்கச் செய்கின்றன.

அதேபோன்று இப்புதிய சட்டமூலத்தில் ‘பயங்கரவாதம்’ என்ற சொல்லுக்கு மிகப் பரந்துபட்ட வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதனூடாக அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் அடக்கப்படக்கூடும் என்ற கரிசனை தோற்றம் பெற்றுள்ளது.

எனவே, திருத்தங்கள் எவையுமின்றி இச்சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின், ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் விளைவாக இடம்பெற்ற மீறல்கள் தொடர்ந்து நிகழ்வதற்கு வாய்ப்பேற்படும்.

எனவே, இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்கும் அதேவேளை, அதனை விடவும் மோசமான சட்டமொன்றின் ஊடாக அச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை இடைநிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# புதையல் தோண்டிய 2 படையினர் கைது

## அவர்களுடன் பிக்குவும் மாட்டினார்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈரலக்குளம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 3 இராணுவத்தினர் மற்றும் ஒரு பௌத்த தேரர் என 4 பேரை நேற்று வெள்ளிக்கிழமை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்து கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வவுணதீவு விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், ஈரலக்குளம் காட்டுப்பகுதியை சுற்றிவளைத்து தேடலில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டஓர் இராணுவ லெப்டினன் கேர்ணல், ஒரு கோப்ரல், ஒரு இராணுவ சார்ஜன்ட் மற்றும் ஒரு தேரர் ஆகிய நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு புதையல் தோண்ட பயன்படுத்திய ஸ்கேனிங் இயந்திரம் மற்றும் இராணுவ ட்ரக் என்ப



வற்றையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றினர்.

கைதான இராணுவத்தினர் வெலிகந்தை, சாலியாபுர முகாம்களைச் சேர்ந்தவர்கள் எனவும், தேரர் பொல்காவலை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் .




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 18 சனிக்கிழமை 01.04.2023 கதிர் 15

## சங்கானையில் இன்று பலர் கூடி ஆர்ப்பாட்டம்

### தமிழர் இருப்பை அழிக்கும்



வடக்குகிழக்கில்தமிழர்களின் இருப்பை அழிக்கும் திட்டமிட்ட செயற்பாடுகளைக் கண்டித்தும் அதைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் சங்கானையில் இன்று காலை 2

## வெடுக்குநாறியில் மீண்டும் லிங்கம் வைப்பதில் சர்ச்சை

### அதிகாலை பிரதிஸ்டைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமயத்தில் திடீர் குழப்பம்



(ந.லோகதயாளன்)

முற்றிலும்அழிக்கப்பட்டவெடுக்குநாறி ஆதி லிங்க ஆலயத்தில் லிங்கம் மற்றும் ஏனைய விக்கிரகங்களையும் மீண்டும் நாளை அதிகாலையில் பிரதிஸ்டை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட சமயத்தில் தொல்பொருள் திணைக்களத்தினர் அந்த இடத்தில் எந்தவொரு மாற்றமும் இன்றி அதனைச் செய்யவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதால் குழப்பம் ஏற்பட்டுச் சர்ச்சையாகி உள்ளது.

நெடுங்கேணியில் சேதமாக்கிய வெடுக்குநாறி ஆதி லிங்கம் நாளை அதிகாலை அதே இடத்தில் பிரதிஸ்டை செய்யப்படவிருந்தது என்று ஆலய நிர்வாகிகளில் ஒருவரான பூபாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

வெடுக்குநாறி மலையில் சிவன், அம்மன், பிள்ளையார் மற்றும் வயிரவர் விக்கிரகங்களே இவ்வாறு பிரதிஸ்டை செய்யப்படவிருந்தன.

பிரதிஸ்டை செய்யப்படவுள்ள விக்கிரகங்கள் அனைத்தும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு. திருமுருகனால் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிகாலை 12 மணி முதல் 3 மணி வரை உள்ள புண்ணிய காலத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகளின் பின்னர் லிங்கம் மற்றும் ஏனைய விக்கிரகங்கள் அங்கே பிரதிஸ்டை செய்யப்பட இருந்தன. 2

## அமைச்சரவையில் உடனடி மாற்றமா?

### ஜனாதிபதியிடம்தான் கேட்க வேண்டும் என்கிறது மொட்டு



அமைச்சரவை மாற்றம் விரைவில் இடம்பெறுமா, இல்லையா என்பதை ஜனாதிபதியிடம்தான் கேட்க வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் நிதி இராஜாங்க அமைச்சருமான செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேசநாணயநிதியத்தின் கடன் தொகையில் முதல் கொடுப்பனவு கிடைத்தவுடன் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எங்குமே சொல்லவில்லை.

அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று அவர்கள், இவர்கள் எதுவும் சொல்லலாம். யார் என்ன சொன்னாலும் ஜனாதிபதி சொன்னால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும்.

ஏனெனில் அமைச்சரவையை மாற்றும் அதிகாரம் ஜனாதிபதியிடம்தான் உண்டு. ஆகவே, அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமா, இல்லையா என்று அவர்தான் சொல்லவேண்டும் – என்றார்.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு மனோ அணியினரும் கடும் எதிர்ப்பு



உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது ஜனாதிபதிக்குக் கடுமையான – கொடுமையான அதிகாரங்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. இதனை ஒருபோதும் ஏற்க முடியாது.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும்கொழும்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

புதியபயங்கரவாதஎதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தைவிடவும், புதிய சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் பயங்கரமானவை. எனவேதான் அதனைப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எனச் சொல்வதைவிட, அரசபயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எனக் கூறுவது பொருத்தமாக இருக்கின்றது.

இந்தப் புதிய சட்டமூலம் ஜனாதிபதிக்குக் கடுமையான – கொடுமையான 2

## பதுளையில் கோர விபத்து: இரண்டு மாணவர்கள் சாவு

### 9 பேர் வைத்தியசாலையில்

பதுளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு மாணவர்கள் உயிரிழந்தனர். அத்து டன் 9 பேர் காயங்களுடன் பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நேற்றும் இன்றும் பதுளை கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்தப் போட்டிக்கு ஆதரவு தெரிவிக்க வந்த வாகனத் தொடரணியில் கப் ரக வாகனம் 2



## மகாவலி ஆற்றில் மூழ்கி 8 வயது சிறுவன் இறப்பு

ஆற்றில் மூழ்கி 8 வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

ஹசலக்க, வெரகந்தோட்டையிலுள்ள மகாவலி ஆற்றில்மூழ்கியேகுறித்த சிறுவன் சாவடைந்தார்.

சிறுவன் தனது மூத்த சகோதரருடன் ஆற்றில் குளிக்கச்சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவன் வெரகந்தோட்டை பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். 2

## தீர்வு இல்லையேல் நாடு முன்னேறாது

### எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

இலங்கையில் இன, மத ரீதியில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்கமுடியும். தீர்வு இல்லையேல் நாட்டுக்கு முன்னேற்றம் கிடையாது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கையில் அமைந்துள்ள ஸ்பெயின் தூதரகத்தின் அரசியல் விவகாரப் பிரிவின் தலைவர் அல்போன்சோஹெரரோ கோரலுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரு தரப்பு ரீதியிலான முக்கிய விவகாரங்கள் குறித்து இங்கு நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. 2



## ஊழலுக்கு எதிரான சட்டமூலத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி பூரண ஆதரவு

### அதன் பொதுச் செயலாளர் அறிவிப்பு

ஊழலுக்கு எதிரான எந்தவொரு சட்டமூலத்துக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தமது முழுமையான ஆதரவை வழங்கும் என்று அதன் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசியாவிலேயே சிறந்த ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தை கொண்டு வரவுள்ளதாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். 2

## அரசின் கால்களை நக்க எதிரணி தயார் இல்லை

### வதந்திகளை நம்பாதீர்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தி சாட்டையடி

அரசுப் பக்கம் தாவி அவர்களின் கால்களை நக்கிப் பிழைப்பு நடத்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் தயார் இல்லை. எதிரணி எம்.பிக்கள் அரசுடன் இணையவுள்ளனர் என்று வெளிவரும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்று எமக்கு ஆணை வழங்கிய மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் அரசில் இருந்து அங்கும் இங்கும் தாவுவதாகப் பேசப்பட்டு வருகின்றது.

2020 ஆம் ஆண்டு இந்த அரசு அமையும் போது அரசில் 157 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால், 2022 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது 135 2

## ஊடகவியலாளர் சனத் ரி.ஐ.டி. விசாரணைக்கு அழைப்பு

சுயாதீன ஊடகவியலாளர் இராமச்சந்திரன் சனத், பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத்தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் நுவரெலியா அலுவலகத்துக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வருகை தருமாறு ஊடகவியலாளர் சனத்துக்கு இன்று அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 2

### வெடுக்குநாறிமலை அராஜகம்:

## சந்தேகநபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை

வவுனியா, நெடுங்கேணி – வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆதிலிங்கம் உள்ளிட்ட சிலைகள் சேதமாக்கப்பட்டு, அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில், இதுவரையில் சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது,



சம்பவம் தொடர்பில் இதுவரையில் சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை. இது தொடர்பில் வவுனியா நீதிவான் நீதிமன்றத்துக்கு வியாழக்கிழமை சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டது.

அத்துடன். இந்த விடயம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து, எதிர்வரும் 2

## மக்கள் விரும்பாத அரசியல்வாதிகள் பட்டியலில் ராஜபக்சக்களே முதலிடம்



இலங்கையில் அதிகம் விரும்பப்படாத அரசியல்வாதிகளின் பட்டியலை இலங்கை சுகாதாரகொள்கைநிர்வாகம் வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் ராஜபக்ச குடும்பத்தின் நான்கு பேர் முதல் நான்கு இடத்தில் உள்ளனர்.

அதன்படி முன்னாள் நிதி அமைச்சர் பஸில்ராஜபக்ச முதலிடத்திலும், முன்னாள் இளைஞர் – 2

# உடுவில் முருகமூர்த்தி வித்தியில் திறன் வகுப்பறை திறந்து வைப்பு

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் திறன் வகுப்பறை திறக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயிலும் பாடசாலையாகிய உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் திறன் வகுப்பறையொன்று அனைத் துலக மருத்துவ நல அமைப்பு (IMHO‡U-SA, ) மற்றும் இரட்ணம் பவுண்டேசன்(Ratnam FoundationUK) நிதி அனுசரணையில் திறக்கப்பட்டது.

68 மாணவர்களுடன் தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரையான வகுப்புக்களுடன் இயங்கும் இப்பாடசாலை மாணவர்களை வசதிகளுடன்கூடியபாடசாலைகளில் பயிலும் ஏனைய மாணவர்களை ஒத்த வகையிலான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் நோக்குடன் இவ் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக உதவியவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி இரு அமைப்புக்களும் திறன் பலகைகளை இவ்வாறான பல பாடசாலைகளுக்கு வழங்கி வருவது மட்டுமல்லாது அக்குறித்த பாடசாலை ஆசிரியர்களை சிறந்த வளவாளர்களைக்கொண்டு பயிற்றுவித்தும் வருகின்றன. பங்குனி 22 ஆம் திகதி இப்பாடசாலையில் இத் திறன்வகுப்பறை அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிடபணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயத்தின் சார்பில் கணித பாட ஆசிரிய ஆலோசகர் ஆதித்தனும் கலந்துகொண்டார்.







## மகாவலி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆற்றில் சிறுவனின் சடலத்தைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சம்பவம் தொடர்பில் ஹசலக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசின்கால்களை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், கடந்த வரவு – செலவுத் திட்டத்தின் போது அது 123 ஆகவும் குறைந்துள்ளது.

அதாவது இந்த அரசில் இருந்து 34 பேர் எதிர்க்கட்சியில் வந்து அமர்ந்திருக்கின்றார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்குகளைப் பெற்றவர்கள் அரசில் ஒருசிலர் இருக்கிறார்கள். ஆனால் முன்னதாக சென்ற ஐந்தாறு பேர் திரும்பி வந்துள்ளனர்.

இன்று அரசின் பக்கமே பிரச்சினையாக இருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் அல்ல என்பதை நினைவுபடுத்துகின்றோம் – என்றார்.

## ஊழலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவ்வாறான சட்டமூலத்தை ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில் நாங்கள் கடந்த மே மாதமே முன்வைத்தோம்.

ஆளும் தரப்பாக இல்லாததால், தனி நபர் பிரேரணையாக அதனைத் தாக்கல் செய்தோம்.

நாங்கள் கொண்டு வந்த சட்டமூலங்கள் தொழிற்சங்கங்களை நசுக்கும் விதமாகவோ அல்லது இளைஞர்களைக் கைது செய்யவோ அல்லது மக்களின் அடிப்படை உரிமைகளைச் சீர்குலைக்கும் வகையிலோ அமைந்திருக்கவில்லை.

அரசு கொண்டுவரவுள்ள ஊழலுக்கு எதிரான சட்டமூலம் திருடர்களைப் பிடிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

ஊழல் அதிகம் இருந்ததால்தான் இந்த நாடு வங்குரோத்து நிலைக்கு வந்தது என்பதை நாம் அறிவோம். தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தில் பெருமளவான வழக்குகள் குவிந்து கிடக்கின்றன.

திருடர்களுடன் இருந்து கொண்டு ரணில் விக்கிரமசிங்கவால் இதனை எவ்வாறு மேற்கொள்ள முடியும். இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றினாலும் அரசால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

ஊழலுக்கு எதிரான எந்தச் சட்ட– மூலத்துக்கும் ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில் பூரண ஆதரவு வழங்குவோம் என்று கூறுகின்றோம் – என்றார்.

## தீர்வு இல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

சஜித்தின் கருத்தை வரவேற்ற ஸ்பெயின் தூதரகத்தின் அரசியல் விவகாரப் பிரிவின் தலைவர், பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரத்தைக் கொடுக்கின்றது. இது தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சிகளைத் தடை செய்யலாம். அது உறுப்பினர்களுக் குப் பாதகமாக அமையும். மக் களுக்குப் பிரசாரம் செய்யவும், ஒன்றுகூட முடியாத சூழ்நிலையும் உருவாகும் – என்றார்.

## ஊடகவியலாளர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புஸல்லாவ பொலிஸார் ஊடாக வழங்கப்பட்டுள்ள குறித்த அறிவித்தலில், பயங்கரவாத விசாரணைப் பிரிவால் முன்னெடுக்கப்படும் விசாரணை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்கு எனக் கூறப்பட்டுள்ளது. எனினும், என்ன விசாரணை என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆசிரியர்பீட பிரதிநிதியாகவும் நாடாளுமன்றச் செய்தியாளராகவும் செயற்பட்ட சனத், தற்போது சுயாதீன ஊடகவியலாளராகச் செயற்பட்டு வருகின்றார்.

## சந்தேக நபர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
10 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்க நீதி மன்றம் திகதியிட்டுள்ளது. – என்றார்.

வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்குத் தடை ஏற்படுத்தும் வகையில், தொல்பொருள் திணைக்களத்தினரும், நெடுங்கேணி பொலிஸாரும் இணைந்து தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், கடந்த 2021ஆம் ஆண்டு வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகள் நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில், தொல்பொருட்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஆலயத்தின் நிர்வாகத்தினர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டனர்.

எனினும், கடந்த வருடம் குறித்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆலயத்தின் பூசகர் மற்றும் நிர்வாகத்தினர்கள் வழக்கிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதாரங்களுடன் கண்டறிந்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிவானால் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், கடந்த 26ஆம் திகதி, ஆலயத்தின் பிரதான விக்கிரகமான ஆதிலிங்கம் அகழ்ந்து எடுக்கப்பட்டு வீசப்பட்டிருந்ததுடன், பிள்ளையார், அம்மன், வைரவர் விக்கிரங்களும் தகர்க்கப்பட்டிருந்தன. இதையடுத்து, குறித்த சம்பவத்துக்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், வவுனியாவில் கண்டனப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில், விசாரணை நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். எனினும், இதுவரையில், சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை என்று நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மக்கள் விரும்பா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விளையாட்டுத்துறை நாமல் ராஜபக்ச இரண்டாவது இடத்திலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச மூன்றாவது இடத்திலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நான்காவது இடத்திலும் உள்ளனர்.

## பதுளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்று பதுளை கழிவுகள் சேகரிக்கப்படும் இடத்துக்கு அருகாமையில் உள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மைதானத்தில் விபத்துக்குள்ளானது.

இதன்போது 11 பேர் காயமடைந்த நிலையில் பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி 19 வயதுடைய இரண்டு மாணவர்கள் உயிரிழந்தனர்.

ஏனைய 9 பேரும் பதுளை வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுள் இருவர் கவலைக்கிடமாக உள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சங்கானையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சங்கானை பேருந்து நிலையத்தில் கூடிய பலர் பதாகைகளை ஏந்தியபடி இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். வெடுக்குநாறி மலை எங்கள் சொத்து, கிண்ணியா எங்கள் சொத்து, நெடுந்தீவு எங்கள் சொத்து, கச்சதீவு எங்கள் சொத்து, அழிக்காதே அழிக்காதே தமிழினத்தை அழிக்காதே, தொல்லியல் திணைக்களமே வெளியேறு, வெளியேறு வெளியேறு படைகளே வெளியேறு, எங்கே எங்கே உறவுகள் எங்கே?, தமிழர்களின் தீர்வு சுயாட்சியே, எடுப்பது பிச்சை அறுப்பது எங்களின் கழுத்தையா உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

தமிழ் அரசுக் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## வெடுக்குநாறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்கிரகங்களை மீண்டும் அங்கு பிரதிஸ்டை செய்ய ஆலய நிர்வாகிகள் அனைவருடனும் கிராம மக்களும் மிக ஆர்வமாக இருக்கின்றனர். இதற்கான பணிகள் மிகத் துரிதமாக இடம்பெறுகின்றன என்றும் பூபாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் அழிக்கப்பட்ட பின்னர் அவற்றை மீள வைக்க என்ன செய்வது என நாம் தவித்தபோது சிவபூமியை சேர்ந்த ஆறு.திருமுருகனே முன் வந்து அனைத்து விக்கிரகங்களையும் வழங்கினார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இன்று வெடுக்குநாறி மலையில் லிங்கத்தைப் பிரதிஸ்டை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்–யப்பட்டுக்கொண்டிருந்த சமயம் அங்கு வந்த பொலிஸார் அவற்றைத் தடுத்து நிறுத்தினர். அத்துடன் அந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த நால்வரைக் கைது செய்தது பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர் என்றும் விக்கிரகங்கள் அனைத்தையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தனர் என்றும் தெரிவித்தனர்.

மலையில் முன்பு சிவலிங்கம் இருந்து உடைக்கப்பட்ட இடத்தில் புதிய சிவலிங்கத்தை நாட்டுவதற்கு வசதியாக ஏற்கனவே அங்கு கொங்கிறீற் இடப்பட்டிருந்த பகுதி அகற்றப்பட்டுக்கொண்டிருந்த போது நெடுங்கேணிப் பொலிசார் அந்தப் பணிகளைத் தடுத்து நிறுத்தினர். தொல்லியல்த் திணைக்களம் அனுமதிக்காமல் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியாது என்று தெரிவித்தனர்.

இதன் காரணமாகத் இன்று பிற்பகல் முதல் தொல்லியல்த் திணைக்களத்தினருடன் ஆலய நிர்வாகத்தினர் பேச்சு நடத்தி வருகின்றனர்.. இதனால் அதிகாலை 12 மணி முதல் 3 மணிவரை உள்ள புண்ணிய காலத்தில் விசேச பூசை வழிபாடுகள் மேற்கொண்டு அதே இடத்தில் மீண்டும் சிவன் பிரதிஸ்டை மேற்கொள்ளப்படுமா என்பது தற்போது கேள்விக் குறியாகியுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

மாவட்டச் செயலகம் மற்றும் அமைச்சர்கள் வழங்கிய உத்தரவாதங்களின் அடிப்படையில் சிவலிங்கத்தை மீண்டும் பிரதிஸ்டை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

அனுமதிக்கப்படாது விட்டால் திருக்கேதீஸ்வரத்தில் இருந்து வெடுக்குநாறிவரை மக்களை அணிதிரட்டி பாதயாத்திரையாக வந்து சிவலிங்கம் வைக்கப்படும்.

அப்போதுள்ளதிணைக்களம் தடுத்தாலும் எந்த அரசு தடுத்தாலும் அது இடம்பெறும். அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு இந்த ஆட்சியும், அரச திணைக்களங்களும் மட்டுமன்றி திணைக்களங்களின் பொய்யை மட்டுமே நம்பும் நீதித்துறையுமே பொறுப்பு என்றும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதனைப் பகிரங்கமாகக் கூறுவதனால் சட்டத்தைக் காட்டி கைது செய்–யப்பட்டாலோ அல்லது வெள்ளை வானில் மீண்டும் கடத்தப்பட்டாலோ அதற்கும் இந்த அரசே பொறுப்பு என்றும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# தென்கிழக்குப் பல்கலையில் ஊடக நுழைவு மையம் திறப்பு



(எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழக கலை,கலாசார பீடத்தின் ஊடக அணுகல் மையம் வியாழக்கிழமை கலை, கலாசார பீடத்தின் மாணவர் செயற்பாட்டு நிலையத்தில் திறக்கப்பட்டது. கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மேலும் இன்ஸ்பெயார் (INSPIRE)

செயற்றிட்டத்தின் முகாமையாளர் சந்துல கும்புக்ககே தலைமையிலான குழுவினர், பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர், பதில் நிதியாளர், கலை கலாசார பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர், சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் உள்ளிட்ட கல்விசார் ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் வரவேற்புரை பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. தனது வரவேற்புரையில் ஹெல்விடாஸ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற மாணவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தமது பீட மாணவர்களின் அறிவு மற்றும் திறன் விருத்தியில் கணிசமானளவு பங்களிப்பு செய்துள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக இளங்கலைப் பட்டதாரி மற்றும் இதழியல் டிப்ளோமா மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஊடகம் மற்றும் இதழியல் தொடர்பான கற்கைகளை உள்ளடக்குவதற்கு பல்கலைக் கழகம் தீர்மானித்துள்ளமை தொடர்பிலும் குறிப்பிட்டிருந்தார்.

குறிப்பாக பீடத்தின் மொழித்துறை, அரசியல் விஞ்ஞானத் துறை, மற்றும் சமூகவியல் துறையின் பாடத்திட்டங்கள் இதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளமை குறித்து உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து இன்ஸ்பெயார் செயற்றிட்டத்தின்முகாமையாளர் சந்துல கும்புக்ககே, ஹெல்விடாஸ் (HELVETAS) நிறுவனம் மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதற்கான காரணங்கள் குறித் தும் எமது பீட மாணவர்களின் வினைத்திறனான பங்குபற்றல் குறித்தும் உரையாற்றினார்.

தொடர்ந்து பிரதம அதிதி உரை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸினால் நிகழ்த்தப்பட்டது. உபவேந்தர் தனது உரையில் மாணவர்களின் திறன் விருத்தியில் குறித்த நிறுவனத்தின் பங்களிப்புக்களை பாராட்டியதுடன் பல்கலைக்கழக சமூகம் குறித்த செயற்றிட்டத்தின் கீழ் தொடர்ந்தும் ஹெல்விடாஸ் (HELVETAS) நிறுவனத்து டன் இணைந்து செயலாற்ற விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

நிகழ்வின் நன்றியுரையினை கலை கலாசார பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.டி.அஸ்ஹர் வழங்கினார்.

இந்நிகழ்வில் இன்ஸ்பெயார் செயற்றிட்டத்தின் கீழ் ஹெல்விடாஸ் (HELVETAS) நிறுவனத்தினால் 1.5 மில்லியன் பெறுமதியான ஊடக உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டதுடன் அதற்கான உடன்படிக்கையொன்றும் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியரியர் அபூபக்கர் றமீஸ் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் சந்துல கும்புக்ககே ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.

# ஐ.நா. மீளாய்வு குழுவின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும்

## சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வலியுறுத்து

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவினால் அடையாளங்காணப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளன சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள். ஐ.நா. குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துமாறும் கோரியுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் இலங்கை தொடர்பான 6ஆவது மீளாய்வுக்கூட்டம் மார்ச் மாதம் 7 – 8 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இம்மீளாய்வின்போது இலங்கை தொடர்பில் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் எதிர்வருங் காலங்களில் இலங்கையால் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய பரிந்துரைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் 12 பக்க இறுதி அறிக்கை மார்ச் 24ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை வரவேற்பதாகவும், கடந்தகால மீறல்களுடன் தொடர்புடையவர்களைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கும் அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவேண்டும் எனவும் சர்வதேச ரீதியில் மனித உரிமைகளை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி இயங்கிவரும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், மனித உரிமைகளுக்கான சர்வதேச பேரவை மற்றும் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் என்பன வலியுறுத்தியுள்ளன.

குறிப்பாக இலங்கையில் பல வருடகாலமாகத் திட்டமிட்ட வகையிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவது ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் அறிக்கையின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 'தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் சமூகத்தைச் சேர்ந்த சந்தேகநபர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள் மற்றும் பாலியல் அத்துமீறல்கள் என்பன தொடர்பில் இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை.

அதேபோன்று அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்புத்தரப்பினரால் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் முக்கிய மனித உரிமைகள் வழக்கு விசாரணைகளுக்குத் தடையேற்படுத்தப்பட்டுள்ளன.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளுக்குப் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருக்கும் அதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்ந்து அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை வெளிப்படுத்துவதில் எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை' என்பன தொடர்பில் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு அவதானம் செலுத்தியிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து அவதானம் செலுத்தப்படாமல் இருப்பது இனியும் தொடரக் கூடாது எனவும், இவ்விவகாரங்களை உரியவாறு கையாள்வதற்கும், இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கும், அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை இதுகுறித்துக் கூட்டாகக் கருத்து வெளியிட்டுள்ள மனித உரிமைகளுக்கான சர்வதேச பேரவை மற்றும் மனித உரிமைகள், அபிவிருத்திக்கான நிலையம் என்பன, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் இலங்கை ஆட்சியினால் மீறப்பட்டிருப்பதை அடிக்கோடிட்டுக் காண்பிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவினால் கண்டறியப்பட்டுள்ள விடயங்களை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளன.

அதுமாத்திரமன்றி அந்த மீளாய்வுக் குழுவினால் கண்டறியப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும், அக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துமாறும் அவ்விரு அமைப்புக்களும் வலியுறுத்தியுள்ளன. காணப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளன சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள். ஐ.நா. குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துமாறும் கோரியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் இலங்கை தொடர்பான 6ஆவது மீளாய்வுக்கூட்டம் மார்ச் மாதம் 7 – 8 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இம்மீளாய்வின்போது இலங்கை தொடர்பில் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் எதிர்வருங் காலங்களில் இலங்கையால் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய பரிந்துரைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் 12 பக்க இறுதி அறிக்கை மார்ச் 24ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை வரவேற்பதாகவும், கடந்தகால மீறல்களுடன் தொடர்புடையவர்களைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கும் அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவேண்டும் எனவும் சர்வதேசரீதியில் மனிதஉரிமைகளை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி இயங்கிவரும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், மனித உரிமைகளுக்கான சர்வதேச பேரவை மற்றும் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் என் பன வலியுறுத்தியுள்ளன. குறிப்பாக இலங்கையில் பல வருடகாலமாகத் திட்டமிட்ட வகையிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவது ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் அறிக்கையின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 'தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் சமூகத்தைச் சேர்ந்த சந்தேகநபர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள் மற்றும் பாலியல் அத்துமீறல்கள் என்பன தொடர்பில் இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை.

அதேபோன்று அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரால் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் முக்கிய மனித உரிமைகள் வழக்கு விசாரணைகளுக்குத் தடையேற்படுத்தப்பட்டுள்ளன.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளுக்குப் பதவியுயர் வுகள் வழங்கப்பட்டிருக்கும் அதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்ந்து அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை வெளிப்படுத்துவதில் எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை' என்பன தொடர்பில் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு அவதானம் செலுத்தியிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து அவதானம் செலுத்தப்படாமல் இருப்பது இனியும் தொடரக் கூடாது எனவும், இவ்விவகாரங்களைஉரியவாறு கையாள்வதற்கும், இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைப் பொறுப்புக்கூறச்செய்வதற் கும், அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. அதேவேளை இதுகுறித்துக் கூட்டாகக் கருத்து வெளியிட்டுள்ள மனித உரிமைகளுக்கான சர்வதேச பேரவை மற்றும் மனித உரிமைகள், அபிவிருத்திக்கான நிலையம் என்பன, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் இலங்கை ஆட்சியினால் மீறப்பட்டிருப்பதை அடிக்கோடிட்டுக் காண்பிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவினால் கண்டறியப்பட்டுள்ள விடயங்களை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளன.

அது மாத்திரமன்றி அந்த மீளாய்வுக்குழுவினால்கண்டறியப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும், அக்குழுவினால்முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துமாறும் அவ்விரு அமைப்புக்களும்வலியுறுத்தியுள்ளன.

## புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கலுக்கு 500க்கு மேல் பொலிஸார் கடமையில்




புளியமபொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவத்தில் 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க கரைச்சி புளியம்பக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொவங்கள் ஏப்ரல் 5 வெகு சிறப்பாக நடைபெற இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பொங்கல் தினத்தில் ஆலத்திற்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள், எனவே அவர்களின் பாதுகாப்புக்காக 550க்கும் மேற்பட்ட பொலிஸார் சீருடையிலும் சிவில் உடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி .எம் சதுரங்க தெரிவித்தார்.

## நிலாவரை வழக்கு ஒத்திவைப்பு

நிலாவரையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட அரசகருமங்களுக்கு முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தடை ஏற்படுத்தினார் என தொடுக்கப்பட்ட வழக்கில், பொலிசார் தாம் மேலதிக ஆலோசனை பெறுவதற்கு நடவடிக்கைஎடுத்துள்ளதாக நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து எதிர்வரும் ஜுலை மாதம் 17 திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டது.

மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையினைப் பெறுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே அச்சுவேலி பொலி-ஸாருக்கு அறிவுறுத்தியிருந்தது. இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிஸ்தரப்பில் இருந்துதாம் மேலதிக ஆலோசனையினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என மன்றி தெரியப்படுத்தப்பட்டது.

நிலாவரையில் தொல்லியல் திணைக்களம் இராணுவத்தினருடன் இணைந்து சந்தேகத்திற்கு இடமான முறையில் அத்திபாரம் போன்று வெட்டிய நிலையில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் நிரோஸ் உள்ளிட்டவர்கள் கடும்

எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர். அங்கு முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பின் காரணமாக இரண்டாவது தடவையாகவும் தொல்லியல் திணைக்களத்தினால் நிலாவரையில் நடவடிக்கையில் ஈடுபட முடியாமல் போனது.

இதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளராக பதவி வகித்த தியாகராஜா நிரோஸ் பெருந்தொகைய-ானேனாரை அழைத்து வந்து தமது கருமங்களுக்கு தடை ஏற்படுத்தனார் என பொலிஸார் ஊடாக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர் தொல்லியல் திணைக்களத்தினர்.

இதனிடையே கடந்த மாதமும் இராணுவத்தினரால் புத்தர் சிலையுடன் பௌத்த கட்டுமானம் ஒன்று நிலாவரையில் நிறுவப்பட்ட நிலையில் அவை தவிசாளர் உள்ளிட்டவர்களின் எதிர்ப்பின் காரணமாக உடனடியாக அகற்றப்பட்டமை குறிப்பிடத்தகது.

## காங்கேசன் – காரைக்கால் கப்பல் சேவையை அனுக கிழக்குக்கு நேரடிப் போக்குவரத்து சேவை

### ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

(அகீல்)

இந்தியாவின் காரைக்காலுக்கும் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணம், காங்கேசன்துறைக்கும் இடையில் தொடங்கப்படவிருக்கும் பயணிகள் படகுச் சேவையின் பயனைக் கிழக்குவாழ் மக்களும் அனுபவிக்கும் வண்ணம்

கிழக்கிலிருந்து, காங்கேசன் துறைக்கு நேரடி இணைப்பு போக்குவரத்து சேவைகளைத் தொடங்க ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், சமூகச்செயற்பாட்டாளருமான ஐ.எல்.எம்.மாஹிர், துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

இந்த படகுச் சேவை மூலம் கிழக்கிலுள்ள வர்த்தகர்களும் இலகுவாகஇந்தியாவுடனான வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். மற்றும்உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி செய்ய முடியும்.

இந்தப் பயன்கள் கிழக்கு மக்களுக்கும் கிடைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனத் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள தவிசாளர் மாஹிர், குறித்த படகுச் சேவைகள் இடம்பெறவிருக்கும் தினங்களை மையப்படுத்தி

மட்டக்களப்பிலிருந்து காங்கேசன் துறைக்கான நேரடி இணைப்பு தொடருந்துசேவைகளை தொடங்க ஆவன செய்யுமாறும்,

இதே அடிப்படையில் கிழக்கின் முக்கிய நகரங்களிலிருந்து குறிப்பிட்ட தினங்களில் காங்கேசன்துறைக்கான போக்குவரத்து பஸ் சேவைகளைத் தொடங்க அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இச்சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம் கிழக்கு மாகாண மக்களுக்கு குறித்த கப்பல் சேவையின் பயனை அனுபவிக்க முடியுமெனவும் முன்னாள் தவிசாளர் மாஹிர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை இந்தப் படகுச் சேவையின் ஒரு வழிப்பயணத்திற்கு பயணி ஒருவரிடமிருந்து 50 டொலர்களை (சுமார் 16 ஆயிரம் ரூபா) அறவிடப்படுவதுடன்,

100 கிலோ கிராம் பொருட்களை பயணி ஒருவர் கொண்டுவர அனுமதிக்கப்படுவரெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு படகில் ஒரே தடவையில் 150 பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவரெனவும், காரைக்கால் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு



நான்கு மணி நேரத்தில் படகு காங்கேசன் துறையை வந்தடையுமெனவும் மேலும் தெரிவிக்கப்பபட்டுள்ளது.

முதல் கட்ட நடவடிக்கைகளின் போது, பகல் நேரங்களில் மட்டுமே இந்த பயணிகள் படகுச் சேவை இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்தப் பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்படவிருப்பது குறித்து தவிசாளர் மாஹிர் மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவித்துள்ளதுடன் அமைச்சருக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்.

## புன்னைக்குடா வீதிப் பெயரை மாற்ற ஏறாவூர் முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்பு

புன்னைக்குடா வீதியின் பெயரை மாற்றும் செயற்பாட்டுக்கு ஏறாவூர் பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஏறாவூர் புன்னைக்குடா வீதியின் பெயரை மாற்றும் செயற்பாட்டுக்கு எதிராக ஏறாவூர் பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தினால் தயாரிக்கப்பட்ட கண்டன மனு ஒன்று ஏறாவூர்நகர்பிரதேசசெயலகத்தில் கையளிக்கப்பட்டது.

ஏறாவூரில்உள்ளடலநிறுவனங்களும் ஊர்ப்பிரமுகர்களும் சேர்ந்து இந்த மனுவைக் கையளித்தனர். இந்த அமைப்பின் தலைவர் முகைதீன் அவர்களினால்குறித்தகண்டனஅறிக்கை உதவிப் பிரதேச செயலாளரிடம் நேரடியாக வழங்கப்பட்டது. இந்தக் கண்டன மனுவில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாண ஆளுனரின் கடிதத்தின்படி புன்னைக்குடா வீதியின் பெயரை எல்மிஸ் வல்கம வீதி என்று (சியிதுஷ்வி நிழியிஆழிதுழி யூலிழி-) பெயர் மாற்றயிருப்பதாக நாங்கள் அறிகிறோம். ஊரிலிருக்கின்ற அனைத்து நிறுவனங்களும், ஊர் மக்களும் இவ்விடயம் அறிந்து மிகவும் கவலையடைகின்றார்கள்.

ஏறாவூரின் அடையாளமாகக் காணப்படுகின்ற இந்த வீதியானது புன்னைக்குடாவீதிஎன்றேஎல்லோராலும் அறியப்பட்டது. இது புன்னைக்குடா கடற்கரைக்கு செல்லும் வீதியாகும். மூன்று இன மக்களும் இவ்வீதியில் வசித்து வருவதோடு, ஊரில் உள்ள நிறுவனங்களினதும், வியாபார நிலையங்களினதும் முகவரியாகக்கூட இவ்வீதி காணப்படுகின்றது. அத்துடன், நீண்டகாலமாக புன்னைக்குடா வீதியென்று அழைக்கப்பட்ட இதன் பெயரை மாற்றுவதை ஊரிலுள்ள அனைத்து நிறுவனங்களினதும் சார்பாக நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பௌத்த சிங்கள பேரினவாத பொறிமுறை

வெடுக்குநாறி மலையில் ஆதி லிங்க ஆலயம் இடிக்கப்பட்டு அங்கிருந்த விக்கிரகங்கள் எல்லாம் அழிக்கப்பட்டமை திட்டமிட்டு நடத்தப்பட்ட செயல். ஒரு வாரம் கடந்தும் அதனைச் செய்தவர்களுக்கு எதிராக இலங்கைக் காவல்துறையினர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், அங்கு ஆட்சிப் பீடத்தின் அனுமதியுடன் மீண்டும் சிலையை நிறுவுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அவர்கள் திட்டமிட்டுத் தடையை ஏற்படுத்துகின்றனர்.

சிவலிங்கத்தை மீண்டும் மலையில் நிறுவுவதற்கான பணிகளில் ஈடுபட்டவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். சிவலிங்கம் உட்பட இந்துக் கடவுள் விக்கிரகங்களை காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. இந்த நடவடிக்கையின் மூலம் தொல்லியல் திணைக்களமும் காவல்துறையினரும் ஒரு பக்கச் சார்பாகச் செயற்படுகின்றனர் என்று தெரிகிறது.

அந்தப் பகுதியில் இருக்கும் ஒரு விகாரைச் சேர்ந்த பிக்குவும் படையினர் சிலருமே மலையில் இருந்த விக்கிரகங்களை உடைத்தழித்து ஆலயத்தை முற்றிலுமாக அழித்தவர்கள் என்று தகவல்கள் இருக்கின்றன. அதன் மூலம் அவர்கள் நீதிமன்ற உத்தரவை மீறி நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தொடர்பில் ஒரு சிறு விசாரணை கூட நடத்தப்படவில்லை. குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. குறைந்தபட்சம் அவர்கள் நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டார்கள் என்பதற்கான ஒரு வழக்கைப் பதிவு செய்வதற்குக்கூட தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், இந்த ஆலய அழிப்பால் இனங்களுக்கு இடையில் ஏற்படக்கூடிய பதற்றத்தைத் தணிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை அவர்களால் துணிந்து தடுத்து நிறுத்த முடிகின்றது. அதுவும் இலங்கையின் உயர் ஆட்சியாளர்களின் அனுமதியோடு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தடுக்க முடிந்திருக்கிறது.

இதன் ஊடாக தொல்லியல் திணைக்களமும் காவல்துறையும் யாருக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன என்கிற கேள்வி எழுகிறது. பௌத்த, பேரினவாதமே அவர்களை இயக்கும் அச்சாணியாக இருக்கின்றது என்பது புலனாகின்றது. இதுவே 1980களில் தமிழ் இளைஞர்களை வன்முறையின் பால் ஈர்த்தது. ஆயுதங்களின் மீது நம்பிக்கை வைக்கப்பண்ணியது. அதன்விளைவுகளைநாடு30ஆண்டுகள்அனுபவித்தது. நாட்டின் இன்றைய படுதோல்விக்கு அது பெரும் காரணமாக இருந்தது. அப்படியிருந்தும் பௌத்த சிங்கள பேரினவாதமும் அதன் கருவிகளும் தமது அச்சாணியிலிருந்து கிஞ்சித்தும் விலகவில்லை. அவை 30 வருடங்களுக்கு முன்னர் நிறைவேறாமல் போன தமது கனவை இப்போது நிறைவேற்றுவதற்குத் துடிக்கின்றன. அதன் விளைவு என்னவாகும்?

இந்த விடயத்தில் அரசுத் தலைவரும் ஆட்சியாளர்களும் தீர்க்கமான ஒரு பொறிமுறைத் திட்டத்தைக் கொண்டிராத வரையில், வெறும் பேச்சால் தமிழ் மக்களை ஏமாற்றி வரும் வரையில் இது ஒரு முடிவுக்கு வராது. அரசுக்குத் தொல்லைகொடுக்கும் பிக்குகளைப் பிடித்து சிறையில் தள்ளும் அரசுக்கு வெடுக்குநாறிப் பிரச்சினைக்குக் காரணமான பிக்குவைப் பிடித்து சிறையில் தள்ள துணிவில்லை என்று சொல்லிவிடமுடியாது.

ஆட்சியாளர்கள் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராகஉறுதியானநடவடிக்கைகளைஎடுக்கத்தவறினால் வரலாறு மீண்டும் மீண்டும் நிகழ்வதைத் தடுக்க முடியாமல் போய்விடும் என்பதைத்தான் வெடுக்குநாறி சம்பவம் உணர்த்தி நிற்கின்றது.

# புன்னைக்குடா வீதிப் பெயரை மாற்ற ஏறாவூர் முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்பு

புன்னைக்குடா வீதியின் பெயரை மாற்றும் செயற்பாட்டுக்குஏறாவூர்பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஏறாவூர் புன்னைக்குடா வீதியின் பெயரை மாற்றும் செயற்பாட்டுக்கு எதிராக ஏறாவூர் பள்ளிவாயல்கள் முஸ்லிம்நிறுவனங்கள்சம்மேளனத்தினால் தயாரிக்கப்பட்ட கண்டன மனு ஒன்று ஏறாவூர் நகர் பிரதேசசெயலகத்தில் கையளிக்கப்பட்டது.

ஏறாவூரில் உள்ள பல நிறுவனங்களும் ஊர்ப்பிரமுகர்களும் சேர்ந்து இந்த மனுவைக் கையளித்தனர். இந்த அமைப்பின் தலைவர் முகைதீன் அவர்களினால் குறித்த கண்டன அறிக்கை உதவிப் பிரதேச செயலாளரிடம் நேரடியாக வழங்கப்பட்டது.

இந்தக் கண்டன மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாண ஆளுனரின் கடிதத்தின்படி புன்னைக்குடா வீதியின் பெயரை எல்மிஸ்வல்கமவீதிஎன்று (Elmis Walgama Road) பெயர் மாற்றயிருப்பதாக நாங்கள் அறிகிறோம். ஊரிலிருக்கின்ற அனைத்து நிறுவனங்களும், ஊர் மக்களும் இவ்விடயம் அறிந்து மிகவும் கவலையடைகின்றார்கள்.

ஏறாவூரின் அடையாளமாகக் காணப்படுகின்ற இந்த வீதியானது புன்னைக்குடா வீதி என்றே எல்லோராலும் அறியப்பட்டது. இது புன்னைக்குடா கடற்கரைக்கு செல்லும் வீதியாகும். மூன்று இன மக்களும் இவ்வீதியில் வசித்து வருவதோடு, ஊரில் உள்ள நிறுவனங்களினதும், வியாபார நிலையங்களினதும் முகவரியாகக்கூட இவ்வீதி காணப்படுகின்றது.

அத்துடன், நீண்டகாலமாக புன்னைக்குடா வீதியென்று அழைக்கப்பட்ட இதன்பெயரை மாற்றுவதை ஊரிலுள்ள அனைத்து நிறுவனங்களினதும் சார்பாக நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்என்றும்அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் போராளிகளுக்கு சி.ஐ.டி தொடர்ந்து தொல்லை

கிளிநொச்சியில் முன்னாள் போராளிகள், சமூகநல செயற்பாட்டாளர்கள் ரி.ஐ.டியினரால் தொடர்ந்தும் விசாரணை என்ற பெயரில்தொல்லைப்படுத்தப்படுகிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன்தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முன்னாள் போராளிகள், சமூகநலச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால்தொடர்ந்தும்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

மார்ச் 24 நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைப் பதிவுசெய்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது;

விவேகானந்தநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த, புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியான அமாவாசை மதிவண்ணன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளரும், கனகபுரம் மாவீரர் பணிக்குழுவின் செயலாளருமான வீரவாகு விஜயகுமார், உருத்திரபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த, புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் தங்கவேலு கண்ணபிரான், இரத்தினபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த சமூகநலச் செயற்பாட்டாளர் சிவப்பிரகாசம்ஜெயதீபன் ஆகியோரே அண்மைய நாட்களில் பரந்தனிலும், இரணைமடுவிலுமுள்ள ரிஐடி அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டு பலமணிநேர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெற்று, நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டியுள்ள நெருக்கடி நிலையிலும் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் குறைந்தபாடில்லை. அதிலும் குறிப்பாக சமூகமயப்பட்டுவாழும் முன்னாள் போராளிகளும், தமிழ்த்தேசிய அரசியற் கட்சிகளின் செயற்பாட்டாளர்களும், சமூகநலப் பணிகளில் ஈடுபடுவோரும் இன்னமும் அச்சம் மிகுந்த சூழலிலேயே இந்த நாட்டில் தமது

வாழ்வை வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் – என்றார்.

## உலக இராம கிருஷ்ண மிஷன் உபதலைவர் இலங்கை வருகை

(வி.ரி.சகாதேவராஜா)

உலக இராமகிருஷ்ண மடங்கள் மற்றும் மின்களின் உப தலைவர் ராமகிருஷ்ண மடங்களின் குருமார்களில் ஒருவராகிய ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ் மட்டக்களப்பு ராமகிருஷ்ணன் மிசனுக்கு வருகை தர சம்மதித்துள்ளார்கள் என்று மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தெரிவித்தார்.

மகராஜ் அவர்களிடம் மந்திர தீட்சை பெற விரும்பும் பக்தர்கள் இந்த வாய்ப்பை தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். மந்திர தீட்சை பெறுபவர்களுக்கான விண்ணப்ப படிவங்கள் வருகின்ற பௌர்ணமி

(ஏப்ரல் 5) புதன்கிழமை ஒன்பது மணி அளவில் ராமகிருஷ்ண மின் சுவாமி விஞ்ஞானானந்தர் மண்டபத்தில் வழங்கப்படும்.



# வழக்கு ஒத்திவைப்பு



(பாறுக் ஷிஹான்)

இளம் பிக்குகள் மீதான பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு பல நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டட பிரதம பௌத்த மதகுரு தொடர்பான வழக்கு ஜூன் மாதம் 22 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையகப்பொலிஸ்பிரிவிற்குட்பட்ட விகாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல் துஸ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான வழக்கு புதன்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் எடுத்துகொள்ளப்பட்டது. ஜூன் மாதம் 22 ஆம் திகதி வரை மறுவிசாரணைக்காகத் திகதியிடப்பட்டது.

அம்பாறைமாவட்டம்சுபயந்தலாவை பகுதியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 இளம் பிக்குகள் கல்முனை பகுதி விகாரை ஒன்றில் வைத்துப் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்றின் அடிப்படையில் 2022 செப்டம்பர் 13 ஆந் திகதி கல்முனை சுபத்ராராமய விகாராதிபதியாக ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் என்றழைக்கப்படும் பிரதான பௌத்த மதகுரு அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் விசேட பிரிவினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

# திருமலை மாவட்ட விவசாயிகளின் பிரச்சினை குறித்து அமைச்சர் ஆய்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்

வெள்ளிக்கிழமை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்துள்ள விவசாயத்தைச் சீர்ப்படுத்தி விவசாயத்தை மேம்படுத்துவதுடன் விவசாய அதிகாரிகள்மற்றும்விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கு தீர்வு காண்பதே இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும். .

மாவட்டத்தில் விவசாய உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாக உள்ள அதிகாரிகள் பற்றாக்குறை குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அதனை நிவர்த்தி செய்ய அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

விவசாயிகளுக்கு அரசு வழங்கும் உரங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. அங்கு, கடந்த பருவத்தில் செய்கை செய்த அனைத்து விவசாயிகளுக்கும், இந்த பருவத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு டி.எஸ்.பி. 55 கிலோவும் 225 கிலோ

யூரியாவும் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

குறைந்தவருமானம்பெருவோருக்கு இதன்போது இலவச அரிசிப் பொதியும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, விவசாய அமைச்சின் செயலாளர் உட்பட மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம மற்றும் விவசாய திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.